www.tamilarangam.net

# அகதி



இதழ் 11: ஜுன் 1997

- ரிவிரெச இரண்டும், யாழ்நகர சமூக நிலைமையும் - ஒரு புதிய மாயை
- சமாதானம் எப்போது? எப்படி கிடைக்கும்?
- வடக்கு முஸ்லிம்கள் தமது வாக்குரிமையை எந்தத் தேர்தல் தொகுதிக்குப் பதிய வேண்டும்?
- என்.எம்.ஆர்.ஓ.விடம் தமிழ் போராளிகளும் முஸ்லிம் காங்கிரஸும் கற்றுக்கொள்ள அதிகம் உள்ளது

விலை ரூபா பத்து

எம்முடைய தாயகமும் வடக்கே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

# அல்லாஹ்வின் பாதையில் போராட வாருங்கள்

"யார் தமது சொத்துக்களைக் காக்கப் போரில் கொல்லப்படுகிறாரோ அவரும் வீர மரணம் அடைந்தவராவார்."

*அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி)*
*நூல்கள் : புகாரி, முஸ்லிம்*

"அல்லாஹ்வின் பாதையில் புழுதிபடிந்த பாதங்களை நரக நெருப்புத் தீண்டுவதில்லை."

*அறிவிப்பவர்: அப்துர் ரஹ்மான் பின் ஜப்ர் (ரலி)*
*நூல் : புகாரி.*

"போராளியின் குடும்பத்திற்கு யாரேனும் பொறுப்பேற்றுக் கொண்டால் அவரும் போர் செய்தவராவார்"

*அறிவிப்பவர் : 'ஸைத் பின் காலித் (ரலி)*
*நூல்கள் : புகாரி, முஸ்லிம்*

"யார் வீரமரணம் அடைய வேண்டுமென மனப்பூர்வமாக விரும்புகிறாரோ அவருக்கு அந்த வாய்ப்புக் கிடைக்கா விட்டாலும் அந்தப் பதவி வழங்கப்படுவார்."

*அறிவிப்பவர் : அனஸ் (ரலி)*
*நூல் : முஸ்லிம்*

"இறையச்சத்தால் அழுத கண், இறைவனின் பாதையில் காவல் புரிந்த கண், ஆகிய இரு கண்களை நரக நெருப்புத் தீண்டாது"

*அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் (ரலி)*
*நூல் : திர்மிதி*

"சுவர்க்கத்தில் நுழையும் எவரும் இப்பூமியில் உள்ள அனைத்தையும் அவருக்கு வழங்குவதாக இருந்தாலும் இப்பூமிக்கு வர விரும்ப மாட்டார். உயிர் தியாகி (ஷஹீத்) மட்டும் அதற்குக் கிடைக்கும் மதிப்பை உணர்ந்து விட்டதால் இவ்வுலகுக்குத் திரும்ப வந்து பத்து தடவை கொல்லப்படுவதை விரும்புவார்."

*அறிவிப்பவர்: அனஸ் (ரலி)*
*நூல்கள் : புகாரி, முஸ்லிம்*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



Northern Muslims' Rights Organization
15A, Rohini Rd.
Colombo-6.
Tel/Fax: 586660
Sri Lanka

بسم الله الرحمن الرحيم

# அகதி

## அகதி

இதழ் 11 : ஜுன் 1997

தொடர்புகள்

வடக்கு முஸ்லிம்களின்
உரிமைக்கான அமைப்பு
15 A, ரோஹினி வீதி,
கொழும்பபு 6
ஸ்ரீ-லங்கா
தொலை பேசி: 593523
பெக்ஸ் 586660

"AHATHI"

*Published by*
NORTHERN MUSLIMS' RIGHTS ORGANIZATION
*15A, Rohini Road*
*Colombo - 6*
*Sri Lanka*

இச்சஞ்சிகையில் வெளியாகும் ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியோரே பொறுப்புடையவர்கள்.

## வடக்கு முஸ்லிம்களின் பிரச்சினைக்கான தீர்வு முயல் கொம்பா?

நாட்டில் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக எடுக்கப்பட்டு வரும் ஒவ்வொரு நடவடிக்கையும் ஈற்றில் பொய்த்து விடுவதையே வரலாறு நெடுகிலும் நாம் கண்டு வருகிறோம்.

இந்நாட்டின் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக பல சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன. ஆனால் அவை நடைமுறைப்படுத்தப்படாது வெற்று எழுத்துக்களாகவே போய்விட்டன.

கடந்த காலங்களை விட தற்போதைய அரசாங்கம் இனப்பிரச்சினையை தீர்த்து வைத்து நாட்டில் சமாதானத்தையும் ஐக்கியத்தையும், அபிவிருத்தியையும் ஏற்படுத்துவதில் தெளிவான சிந்தனையும் உறுதியான செயற்பாட்டையும் கொண்டுள்ளதாக தன்னை இனம் காட்டியது.

ஆனாலும், ஆட்சியமைத்து இரண்டரை வருடங்கள் கழிந்து விட்ட போதிலும், இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தில் எவ்வித முன்னேற்றமும் இடம் பெற்றதாகத் தெரியவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆட்சியமைத்த ஆரம்ப நாட்களில் யுத்த நிறுத்தமும், பேச்சுவார்த்தைகளும் தடல்புடலாக இடம்பெற்ற பொழுதிலும், இருசாராரின் விட்டுக் கொடாத தன்மையின் காரணமாக தற்பொழுதும் யுத்தம் தொடர்கிறது.

யுத்தத்துக்கு தேசிய, சர்வதேச ரீதியில் ஆதரவைப் பெறும் நோக்கோடு 'சமாதானத் துக்கான யுத்தம்' என்ற அழகான நாமத்தைச் சூடி யுத்த முனையில் கடந்த அரசை விட தற்போதைய அரசு முனைப்போடு ஈடுபட்டு வருகிறது.

இச் சூழ்நிலைக்கு மத்தியில், அரசியல் யாப்பு சீர்திருத்தம் - மாற்றம், அதன் மூலம் அதிகாரப் பரவலாக்கம். இந்நாட்டில் வாழும் சகல இன மக்களும் உரிமையோடு வாழ வழிவகுக்கும் என்ற பீரங்கிப் பிரச்சாரங்கள், பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் கூட்டங்கள், அரசியல் யாப்பு சீர்திருத்தங்களின் நகல் வரைவுகள் என இனப் பிரச்சினை விவகாரம் போய்க் கொண்டிருக்கின்றது.

இதற்கிடையில் பத்திரிகைச் செய்திகளில், வடகிழக்கு இணைப்புக்கு நிபந்தனையுடன் ஸ்ரீ.மு.காங்கிரஸ் உடன்பாடு, யு.என்.பியும், அனைத்து தமிழ் பேசும் கட்சித் தலைவர்களும் இனப்பிரச் சினைத் தீர்வுக்கான பேச்சு வார்த்தை என பரபரப்பான தலைப்புக்களுடன் செய்திகள் நாளாந்தம் வெளிவந்து கொண்டிருக் கின்றன.

ஆனால் உண்மையில் என்ன நடைபெறுகிறது?

இறுதியாக வந்த செய்தி இதுதான்!

பிரிட்டிஷ் முன்னாள் பிரதி வெளிவிவகார அமைச்சர் கலாநிதி 'பொக்ஸ்' மூலம் சந்திரிக்கா ரணில் கூட்டு ஒப்பந்தம்.

இது ஒரு வரலாற்று முக்கியத் துவமிக்கதாக கருதப்பட்டது. ஆனால் தற்பொழுது வந்து கொண்டிருக்கும் செய்திகள் இதிலும் நம்பிக்கையிழக்கச் செய்கின்றன.

இவை ஒவ்வொன்றையும் ஆராய்ந்து பார்க்கும் பொழுது கடந்த ஆறு வருடங்களுக்கு முன்பு புலிகளினால் பலவந்தமாக ஆயுத முனையில் வெளியேற் றப்பட்ட வடமாகாண முஸ்லிம்களின் நிலை கேள்விக்குரியதாக இருக்கிறது. எந்தவொரு கட்டங்களிலும் வடக்கு முஸ்லிம்களின் பிரச்சினை கவனத்தில் எடுக்கப்படுவதாக இல்லை. அது மறக்கப்பட்ட ஒரு பிரச்சினையாக ஆகிவிட்டது.

வடக்கு முஸ்லிம்களுக்கென்று தனித்து வமான ஓர் அரசியல் தலைமைத்துவம் இல்லாததன் காரணமாக, நாம் எமது பிரச்சினைகளை முன்னெடுப்பதற்காக, தீர்வு காண்பதற்காக வேறு அரசியல் கட்சிகளில் தஞ்சம் அடைய வேண்டிய நிலையில் இருக்கின்றோம்.

நாம் மற்றவர்களில் நம்பிக்கை வைக்கும் அளவுக்கு அவர்கள் எமது விடயத்தில் இதய சுத்தியுடன் நடந்து கொள்கிறார்களா? இது மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கிய கதையாக அமைந்து விட்டது.

உண்மையில் இலங்கையின் இனப் பிரச்சினை வரலாற்றில் அனைத்து இனங்களையும் விட குறிப்பாக தமிழ் மக்களையும் விட, அனைத்து பிரதேச மக்களையும் விட வடக்கு முஸ்லிம்கள் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்கள். ஆம். நாம் எமது தாயக மண்ணிலிருந்து வேரோடு பிடிங்கி யெறியப்பட்டவர்கள். இவ்வாறு வேறு எந்தப் பிரதேச மக்களுக்கும் ஏற்படவில்லை இது யாரும் மறுக்க முடியாத யதார்த்தம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எனினும், எமது பிரச்சினை இன்றும் தேசிய, சர்வதேசிய மயப்படுத்தப் படவில்லை. எமது பிரச்சினைக்கு ஓர் அரசியல் முக்கியத்துவம் தரப்படவில்லை. காரணம் நாம் மிகவும் குறைந்த தொகையுடைய மக்கள் வடக்கிலே 5%மான மக்கள். எனவே எமது பிரச்சினை ஒரு முக்கிய பிரச்சினையாக கொள்ளப்படவில்லை. ஆனால் எம்மை விற்று தங்களது வயிற்றை நிரப்பி ஏப்பம் விட, எம்மை வைத்து அரசியல் நடத்த - லாபம் தேட அரசியற் கட்சிகளும் அமைப்புக்களும் இருக்கின்றன. இதற்கு நாம் தொடர்ந்து அனுமதித்துக் கொண்டுதான் வரப்போகிறோமா? இந் நிலையை என்ன விலை கொடுத்தாவது நாம் மாற்றியமைக்க வேண்டும்.

இது கடந்தகால வரலாறு தரும் ஒரு பாடம். இதற்காக நாம் வடக்கு முஸ்லிம்களுக்கென்று தனித்துவமான ஓர் அரசியல் கட்சி வேண்டும் என்ற முடிவுக்கு உடனேயே வந்து விட வேண்டு மென்பதல்ல.

எமது மக்கள் தங்களது பறிக்கப்பட்ட, இழந்த உரிமைகளை வென்றெடுப்பதற்காக தங்களது அனைத்து பேதங்களையும் மறந்து ஐக்கியப்பட்டு ஒரே குரலாக தங்களது பிரச்சினையை முன்வைக்க முன்வரும் பொழுது எமது பிரச்சினை முக்கியத்துவம் பெறத்துவங்கும்.

தற்பொழுதுள்ள காலகட்டம் மிகவும் முக்கியமானதாகும். வடக்கில் முஸ்லிம்கள் வாழ்ந்த பெரும்பாலான இடங்கள் பாதுகாப்புப் படையினரின் கைவசம் வந்துள்ளது. இந்நிலையில் இப் புதிய மாற்றங்களினால் மக்களும் அதற்கு முகம் கொடுக்க பல வழிகளிலும் எத்தனித்தும் வருகின்றனர்.

இச்சந்தர்ப்பத்தில் நாம் மிகவும் தூரதிருஷ்டியுடனும் பொறுப்புடனும் செயல்பட வேண்டியுள்ளது. இல்லையெனில் எதிர்காலம் அடிமை வாழ்வாகவும், இருண்ட யுகமாகவுமே நமக்கு இருக்கும். எனவே இன்று எமக்கு அவசரமும் அவசியமுமாகத் தேவையானது ஒன்றுபட்ட ஓர் அமைப்பேயாகும். அதன் மூலமாக எமது குரலை உயர்த்த முடியும். ஐக்கியமான செயற்பாட்டின் அடிப்படையிலேயே உரிமைகளை வென்றெடுக்கவும் முடியும். எமது ஒற்றுமையே எமக்குப் பலம். இதனை உணர்ந்து செயலில் காட்டாத வரையில் எமது பிரச்சினைக்குத் தீர்வு முயல் கொம்புதான்.

பிளந்து கிடந்தால்
புழுக்களும் நம்மை
அடிமைப்படுத்தி விடும்
இணைந்து நடந்தால்
புலிகளும் நமக்கு
அடிபணியும்...!

உடைகள் தாம்
வேறு வேறு
உரிமைக்கொடி
ஒன்றுதானே!

தனித்து நின்றால்
பூங்காற்றுகூட தலைக்குமேல்
அணிவகுத்து வந்தால்
கரும்புயலும் நம் காலடியில்!

காலம் நம்மை எழுந்து
நில் என்று கூவும் போது
நாம் உட்கார்ந்தால் நிச்சயம்
படுக்கத்தான் நேரிடும்.
- சர்ச்சில் -

ஒன்று படுவோம்! வெற்றி பெறுவோம்!!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எண்ணக் குமுறல்கள்

அதிர்ஷ்டவசமாக 'அகதி' இதழ் எமது கலாசாலையின் வாசிகசாலையை வந்தடைந்தது. உண்மையில் இளம் இதயங்களின் துடிப்பை உரிமைக் குரலாக வெளிக் கொணருவதையிட்டு நாம் பெருமிதமடைகின்றோம். நமது சொந்த மண்ணை விட்டு வேட்டை நாய்களால் விரட்டப்பட்டு பிறிதொரு மண்ணில் அகதிகளாய் அவதியுறும் எமது இஸ்லாமிய இதயங்கள் மீண்டும் தங்கள் சொந்த மண்ணை சென்றடைய வேண்டும். அங்கு சென்று அவர்கள் நிம்மதி பெற வேண்டும் என்பதே எமது அவாவாகும்.

*காவத்தமுனை ஹாறூன், ஸஃஹ்வா அரபுக்கல்லூரி, பாலமுனை.*

▼▼▼

'அகதி' என்ற சஞ்சிகையை கையேந்தி வரவேற்கின்றேன். இவ்விதழைத் தொடர்ந்து படிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கின்றது. இவ்விதழ் ஆழமான கருத்துக்களை உள்ளடக்கி அகதிகளின் அவலநிலைகளை சுட்டிக்காட்டி, அதற்குப் பரிகாரம் காணும் சாதனமாகத் திகழ்கின்றது. இவ்விதழ் எதிர்காலத்தில் ஓர் இஸ்லாமிய எழுச்சியை உருவாக்குமென்பதில் ஐயமில்லை. எனவே இவ்விதழ் தொடர்ந்தும் வெளிவர என் நல்வாழ்த்துக்கள்.

*ஏ.ஜெமீல் ஹஸன், அகத்தி முறிப்பு, மன்னார்.*

▼▼▼

எங்கள் வாழ்விற்கு ஒளியேற்ற வந்த அகதியே, பொன் எழுத்துக்களால் பொறுக்கப்பட்டு அழகிய ஒரு சஞ்சிகையாக வெளிவந்த அகதியே.... துன்பத்தின் விளிம்பில் நின்று துயர் கொள்ளும் உள்ளங்களுக்கு உற்சாகம் ஊற்றும் "அமுதே"... நீ சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் சுவையாக உள்ளது. எமது பாராட்டுக்கள். அகதிகளுக்கு ஏற்படும் இன்னல்களை உடனுக்குடனே அறிய உதவும் விதத்தில் அமைந்தமைக்கும் வாசகர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்கும் வகையில் அமைந்ததற்கும் பாராட்டுக்கள். நீ என்றென்றும் நிலைபெற்று எமது தாயகத்தை மீட்க துணைபுரிய வேண்டுமென இறைவனிடம் இறைஞ்சுகின்றேன்.

*எம். எஸ். பஸ்மிலா, புத்தளம்.*

▼▼▼

அகதி கண்டு கண்ணீரைக் காணாத எங்கள் கண்கள் கண்ணீர் சிந்தின. அன்பை அரவணைக்காத எங்கள் கல் நெஞ்சங்கள் கனிந்து கொண்டன. இதுவாவது எங்கள் சமூகத்தை ஒற்றுமைப்படுத்துமா? சிந்திக்கச் செய்யுமா? இது எங்களுக்குள் ஒரு வித்தியாச விளக்கத்துடனான உணர்வுடன், பெருமானப் பாரத்துடன் கரம் வந்து சேர வாழ்த்துகிறோம்.

*பற்றான், அக்கரைப்பற்று*

▼▼▼

தொடர்ச்சியாக 'அகதி'யைப் படிப்பவர்களில் நானும் ஒருவன். கிழக்கு மாகாணத்தில் இருக்கும் எனக்கே வடக்கு மாகாண முஸ்லிம்களைப் பற்றித் தெரியாமல் இருக்கிறது. 'அகதி' மூலம் எவ்வளவோ விடயங்களைப் பற்றிப் படித்துள்ளேன். யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா மாவட்ட முஸ்லிம்களின் வரலாறுகளைச் சற்றுச் சுருக்கமாகத் தனித்தனியே எழுதுங்கள். எருக்கலம்பிட்டியைப் பற்றி எழுதியிருந்தீர்கள். மிகப் பிரயோசனம். முடியுமானால் முஸ்லிம்களின் தனிப்பெரும் கிராமங்களைத் தனித்தனியே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எழுதுங்கள். 'அகதி' வடக்கு முஸ்லிம்களின் வரலாற்றில் ஓர் ஏடு. ஏட்டைக் கைவிடாதீர்கள். தொடர்ந்து போராட்டத்தை எடுத்துச் செல்ல 'அகதி' தான் ஓர் ஆதாரச் சான்று.

***எஸ்.எம்.எம். றபீக், அலியார் வீதி, கல்முனை 06.***

▼▼▼

தங்கள் அமைப்பின் பத்தாவது 'அகதி' இதழ் கிடைக்கப் பெற்றேன். இதுவரை வெளிவந்த 'அகதி' இதழ்களை தொடராக வாசித்து வருகின்றேன். 1992களில் ஆரம்பிக்கப்பட்ட NMRO அமைப்பானது இன்று வரை வடமாகாண முஸ்லிம் சமூகத்தின் தாயக மீட்சிக்காக மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்காக எனது நன்றியையும் ஆதரவையும் தெரிவித்துக் கொள்கின்றேன். 1990ம் ஆண்டு வடக்கு மண்ணில் இருந்து பலவந்த வெளியேற்றத்திற்கு உட்பட்ட வடக்கு முஸ்லிம்கள், தலைமைத்துவமற்ற அரசியல் அநாதைகளாக, அடங்கிக் கிடந்த வேளை, அவர்களது பிரச்சினைகளை இனங்கண்டு வடமாகாண முஸ்லிம் அகதிகள் இனப்பிரச்சினையின் சூழ்நிலையால் தோற்றுவிக்கப்பட்டவர்கள் என்பதையும், இதனால் அவர்களுக்கு தனித்துவமான தீர்வு அணுகுமுறைகள் அவசியம் என்பதையும் குறிக்கோளாகக் கொண்டு "எமது தாயகமும் வடக்கே" என்ற தங்களது போராட்டத்தின் துணை ஊடகமாக 'அகதி இதழ்' அமைந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது. உண்மையில் ஒரு நியாயமான உரிமைப் போராட்டத்தை வென்றெடுக்கும் சாதனங்களில் "மீடியாக்கள்" கூடிய பங்காற்றுகின்றன. இந்த வகையில் "அகதி" இதழின் ஊடாக வடக்கு முஸ்லிம் சமூகத்தின் பல்வேறுபட்ட பிரச்சினை களையும் ஆய்வு செய்து அதனை சர்வதேச சமூகத்தின் முன் கொண்டுவருவதில் பத்தாவது இதழில், இருந்து ஆங்கிலத்திலும் ஒரு பகுதி சேர்க்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதொரு முயற்சியாகும். தங்கள் பணி என்றென்றும் தொடர வேண்டுமெனவும், இறைவன் இலங்கை முஸ்லிம் சமூகத்தின் விடுதலைப் போராட்டத்தை வெற்றி பெறச் செய்ய வேண்டும் எனவும் பிரார்த்திக்கின்றேன்.

***எம்.பி.எம். பிர்தௌஸ், 'பைத்துல் பறகத்', காத்தான்குடி 04.***

▼▼▼

சென்ற அகதி இதழை வாசித்தவுடன் NMRO தொடர்பில் சில கருத்துக்களை எழுத நினைக்கின்றேன். NMRO, SLMC இடையிலான உடன்பாடு ஓர் கருத்து ரீதியான உடன்பாடாக இருக்க வேண்டுமே ஒழிய NMRO வின் கொள்கை, செயற்பாடு, முன்னெடுத்தலுடனான ஓர் உடன்பாடாக இருக்கக் கூடாது. அவ்வாறு இருப்பின் அது உங்களது இலட்சியத்தையே நலிவடையச் செய்யும் அல்லது பின் தள்ளும். காரணம் SLMC தலைமைத்துவச் சூழல் ஓர் குறுகிய நலத்தைக் (வாயில் இருந்து வயிற்றை எல்லையாக) கொண்டது. எனவே, உங்களது போராட்ட உணர்வையே தனதரசியல் உணவாகக் கொள்ளும். NMRO வின் வெளியீடுகளான "We want to go Home, Refugees are People ஆகிய இரு நூல்களையும் பாராட்டாமல் இருக்க முடியாது. பல முக்கிய தகவல்கள் அடங்கிய இந் நூல்கள் தமிழிலும் வெளிவராதது பாரிய குறையே. தமிழிலும் வெளிவர ஆவன செய்வீர்கள் என எதிர்பார்க்கின்றேன்.

***ஏ.பி.எம். இம்தாத், வாழைச்சேனை.***

▼▼▼

உலக வரலாற்றிலேயே அயோக்கியர்களினால் சில மணிநேர அவகாசத்தில் மனித நேயமற்ற முறையில் வெளியேற்றப்பட்டு, தமது உரிமையை மீளப் பெற்றெடுக்க போராடாத சமூகமாக உணர்வுகள் மங்கி, கலாசாரம் புதையுண்டு ஓலைக் குடில்களில் முடங்கிக் கிடக்கும் வடக்கு முஸ்லிம்களுக்கு மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி எழுச்சி பெற்ற சமுதாயமாக மாற்ற NMRO தொடர்ந்து சேவை செய்து வருவதைப் பாராட்டுகின்றேன். என்றும் NMRO தனது செயற்களத்தில் வெற்றி நடைபோட எனது ஒத்தாசையும் வாழ்த்துக்களும்.

***வடக்கிளைஞன், D.T.A. அறபுத்துறைக் கலாபீடம், பறகஹதெனிய***

▼▼▼



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# "ரிவிரெச" இரண்டும் யாழ் நகர சுமுக நிலைமையும்

## ஒரு புதிய மாயை

**1996** ஏப்ரல் இறுதிப் பகுதியில் ரிவிரெஸ 2 என அழைக்கப்பட்ட இராணுவ நடவடிக்கையின் மூலம் யாழ் குடாநாடு புலிகளின் ஆதிக்கத்திலிருந்து மீட்கப்பட்டு அரச கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது.

இக் காலகட்டங்களில் குடா நாட்டில் இருந்து வெளியேறி இடம் பெயர்ந்து வாழ்ந்த தமிழ் மக்கள் சொந்த இடத்துக்கு திரும்பிக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால் திரும்ப வருபவர்கள் பலரும் தத்தமது சொந்த வீடுகளில் தங்க முடியாதுள்ளது. அநேகமான வீடுகள் சேதமடைந்துள்ளதே இதற்குக் காரண மாகும். அரசும் ரிவிரெஸ இராணுவ நடவடிக்கையின் மூலம் 80%த்துக்கும் அதிகமான கட்டிடங்கள் சேதமடைந்துள்ளது என்பதை ஒப்புக் கொண்டுள்ளது.

மக்களில் கணிசமான தொகையினர் தமது சொந்த இடங்களுக்கு திரும்பிக் கொண்டிருப்பினும் அவர்களது வீடுகளைத் திருத்துவதற்கு அரசு இதுவரையில் எவ்விதமான நிதி உதவிகளையும் வழங்க வில்லை. இதனால் உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர். உறவினர் நண்பர்கள் வீடுகளெல்லாம் குட்டி குட்டி அகதி முகாம் போன்று காட்சியளிக்கிறது. இதனை விட, இராணுவமும் புதிதாக நகருக்குள் நுழைபவர்களை விசாரித்து முகாம்களில் தங்க வைத்தே அனுப்புகின்றது.

தொண்டர் நிறுவனங்களுக்கான தடைகள் தற்போது நீக்கப்பட்டதனால், கெயார், சர்வதேச சிறுவர் பாதுகாப்பு நிதியம், யூ.என்.எச்.சி.ஆர் உட்பட இன்னும் சில நிறுவனங்கள் தற்பொழுது தமது வேலைத் திட்டங்களை அங்கு ஆரம்பித்து உள்ளது. இத் தொண்டர் நிறுவனங்களே பாடசாலை களை புனரமைப்பதற்கு நிதி உதவிகளை அளித்து வருவதுடன் குடிநீர், சுகாதாரம் போன்றவற்றிற்கும் அவை உதவுகின்றன.

மேலும் இத் தொண்டர் நிறுவனங்கள் மலசல கூடங்கள், குழாய்க் கிணறுகள், வீதி திருத்தம், சனசமூக நிலைய அபிவிருத்தி போன்றவற்றிற்கும் உதவி வருகின்றன.

யாழ் குடாநாட்டுக்கு திரும்பி வருபவர்களில் வலிகாமம் வடக்கு பகுதியில் உள்ள மயிலிட்டி, தெல்லிப்பழை, மல்லாகம், பலாலி, காங்கேசன்துறை பகுதிகளில் உள்ளவர்கள் தமது சொந்த வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்பட வில்லை.

1990ன் இறுதிப் பகுதியில் புலிகளினால் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் வாழ்ந்த பகுதிகளும் வெறிச் சோடிக் கிடக்கின்றன. அங்கொன்றும் இங்கொன்றுமாக சில தமிழ்க் குடும்பங்கள் முஸ்லிம்களின் வீடுகளில் தங்கியுள்ளன. இவர்கள் கூட அப்பகுதியில் முகாம் அமைத்துள்ள இராணுவத்தினர் தங்களது சிறு சிறு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தேவைகளை இவர்கள் மூலம் பூர்த்திசெய்து கொள்வதற்கு உதவியாகவே இவர்களை அங்கு வைத்துள்ளதாக கூறப்படுகிறது.

முஸ்லிம் வட்டாரத்தில் முஸ்லிம் கல்லூரி வீதியில் புதுப்பள்ளிச் சந்தியிலிருந்து நாவாந்துறை கடற்கரை வழியாக (பொம்மை வெளி) புதிய சோனகதெரு உள்ளடங்கலாக பாதுகாப்பு வலயமாக இராணுவம் பிரகடனப் படுத்தியுள்ளது. இப்பகுதியில் எவரும் உட்பிரவேசிக்க முடியாது. ஒஸ்மானியாக் கல்லூரி இராணுவத் தளபாட களஞ்சிய மாகவும், உயர் அதிகாரிகள் தங்கயிருக்கும் இடமாகவும் இருக்கிறது. இதனால் நவாந்துறைப் பகுதியில் வாழ்ந்த மக்களை முஸ்லிம்களுடைய வீடுகளில் குடியிருக்கும்படி இராணுவம் அனுமதியளித்துள்ளது.

சோனகதெருவின் எல்லைப் புறங் களில் உள்ள பல வீடுகள் சேதமாக்கப் பட்டும், காணாமலும் போய் விட்டுள்ளன. மத்திய' பகுதிக்குள் இருக்கும் வீடுகளில் பல, கூரைகள், நிலைகள், கதவுகள் இன்றி காணப்படுகின்றது. மஸ்ஜிதுகள், பாடசாலை கள் போன்ற பொது ஸ்தானங்களில் கூட சூறையாடல்கள் இடம்பெற்றுள்ளது. புலிகளின் கட்டுப்பாட்டிலிருக்கும் பொழுது பாதுகாப்பாக மூடியிருந்த மஸ்ஜிதுகள் இன்று பாதசாரிகளின் தங்குமிடமாக மாறியுள்ளது.

குடாநாட்டில் தொடர்ந்து மாலை ஆறு மணியிலிருந்து காலை ஆறு மணிவரை ஊரடங்குச் சட்டம் நடைமுறையிலுள்ளது.

உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருள்கள் கொள்ளை மலிவாகக் கிடைக்கிறது. அதே நேரம் கொழும்பிலி ருந்து வரும் உணவுப் பொருட்கள் சற்றுக் கூடுதலான விலைக்கே கிடைக்கக் கூடியதாக இருக்கிறது. சில சந்தர்ப்பங்களில் குழந்தைகள் பால்மா, குறிப்பிட்ட மருந்து வகைகள் அதிக விலை கொடுத்தும் வாங்க முடியாத நிலையுள்ளது என்று மக்கள் கூறுகின்றனர்.

தற்பொழுது பகலில் மீன் பிடிக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளதால் மீனின் விலை சற்று வீழ்ச்சியடைந்திருந்தாலும் பிடிக்கப்படும் மீன் போதுமானதாக இல்லை. 20%மானோரே மீன் பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் அரசு விசேட அடையாள அட்டையொன்றை வழங்கி வருகிறது. இதுவரையில் இரண்டு இலட்சம் பேருக்கு இவ் அடையாள அட்டை வழங்கப் பட்டுள்ளது. பொலிஸ் நிலையங்களும் சில பகுதிகளில் இயங்கிய பொழுதிலும் அங்கு சிங்கள மொழி தெரிந்திருந்தால்தான் ஏதேனும் காரியங் களைச் செய்ய முடியும். பதிவுகள், முறைப்பாடுகள் யாவும் சிங்கள மொழியிலேயே இடம் பெறுகின்றன.

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் மக்களிடையே நல்லுறவை ஏற்படுத்த இராணுவம் பல முயற்சிகளை எடுத்து வருவதாகத் தெரிகிறது.

மக்களுக்கும் இராணுவத் துக்கும் புரிந்துணர்வை ஏற்படுத்த பல இடங்களில் பிரஜைகள் குழுக்களை இராணுவம் அமைத்து வருகிறது. இன்னும் இளைஞர்கள் மத்தியில் புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்காக இளைஞர் கழகங்கள் பலவற்றையும் இராணுவமே முன்னின்று அமைத்து வருகிறது.

இதேவேளை யாழ் போதனா வைத்தி யசாலையில் பொலிஸ் பிரிவும், மரண விசாரணை அதிகாரி அலுவலகமும் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இவ்வைத்தியசாலைப் பொலிஸ் பிரிவில் பெண் பொலிசாரும் பணியாற்றி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், தபால் நிலையங்களில் வானொலி, தொலைக்காட்சிப் பெட்டி களுக்கான அனுமதிப் பத்திரங்களும் வழங்கப் பட்டு வருவதுடன் உள்ளூராட்சி சபைகளில் இவ்வாண்டிற்கான சைக்கிள் நம்பர் பிளேட்டுகளும் விநியோகிக்கப்படுகிறது.

குடா நாட்டில் உள்ள விளையாட்டு மைதானங்கள் அனைத்தும் தற்போதும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வெறிச்சோடியே காணப்படுகின்றன. யாழ் குடாநாட்டின் மீது இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதிலிருந்து இதுவரை அங்குள்ள பொதுவிளையாட்டு மைதானங் களிலோ, பாடசாலை விளையாட்டு மைதானங்களிலோ எந்தவொரு விளை யாட்டுகளும் நடை பெறவில்லையென்றே மக்கள் கூறுகின்றனர்.

இராணுவ நடவடிக்கைகளின் போது விமானத்திலிருந்து வீசிய பல குண்டுகள் இப்பகுதிகளில் உள்ள விளையாட்டு மைதானங்களில் வீழ்ந்து வெடித்து சேதப்படுத்தியதுடன் சில குண்டுகள் மைதானங்களில் புதைந்து வெடிக்காத நிலையிலும் இருக்கின்றன. இராணுவத்தினர் முகாமிட்டிருக்கும் பகுதிகளுக்கு அண்மை யில் இருக்கும் விளையாட்டு மைதானங் களை இராணுவத்தினர் சீர்செய்து அந்த மைதானங்களில் இராணுவத்தினர் மட்டுமே பொழுது போக்காக விளையாடுகின்றனர். பலாலி விமானத்தளத்திலிருந்து யாழ் நகரை இணைக்கும் பிரதான வீதியாக பலாலி வீதி முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வீதியின் பாதுகாப்பின் பொருட்டு பிரதான பாதுகாவலரன் ஒன்று தொடர்ச்சியாகப் பேணப்படுகின்றது. இதன் விளைவாக காங்கேசன்துறை வீதி, பருத்தித் துறைவீதி, கண்டிவீதி, ஆகியவற்றிடையேயான தொடர்பு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

வீதிகளிடையே அமைந்த காவலரண் களில் தமது பரிசோதனையை முடித்த பின்னரே மக்கள் நகரினுள் பிரவேசிக்க அனுமதிக்கப்படுகின்றனர். அரச அலுவலர் கள், பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் ஆகியோர் பாது காப்பு அரண்களைக் கடந்து செல்வதற்கு முன்னுரிமையைப் பெறுகின்றனர்.

சாதாரண பொதுமக்கள் வீதிகளிலும் பாதுகாப்பு அரண்களிலும் தமது சோதனையை முடித்து நகரினுள் பிரவேசிப் பதற்கிடையில் அதிகளவு துன்பத்தை அனுபவிக்கின்றனர்.

சகல பிரதான வீதிகளும் இராணுவக் காவலரண்களாலும் சிறுசிறு முகாம்களாலும் பாதுகாக்கப்படுகின்றன. இவ்வீதிகளில் மறைப்பாக இருந்த அனைத்தும் அகற்றப்பட்டு காணப்படுகின்றது. இவ்வீதி களில் தொடரான சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு வாகனங்கள் யாவும் சோதனைக்கு உள்ளாக்கப்படுகின்றன.

மக்கள் தொகை நகரின் மத்தியில் அதிகமாக உள்ளது. மக்கள் தொகை கிராமங்களில் அதிகளவில் இல்லை. ஆனால் கிராமம் நகரம் என்ற வேறுபாடு அதிகளவில் காணப்படுகின்றது.

நகர்ப் பகுதியில் ஒவ்வொரு வீட்டிலும் வாழ்பவர் தொடர்பான விபரம் அவர்களை அண்டிய பிரதேச காவல் நிலையத்தில் கடமை புரிபவர்கட்குத் தெரியும்.

ஒவ்வொருவரும் தாம் வாழும் பிரதேசத்துடனேயே பெருமளவிலான தொடர்பை வைத்துள்ளனர். ஏனைய பிரதேசங்களிற்கு செல்ல அனுமதி பெற வேண்டும்.

கிராம மக்கள் தாமும் தமது வீடும் என்ற கொள்கையை முதன்மைப் படுத்துகின்றனர். தேவைகளின் அவசிய நிலைமைகளைப் பொறுத்து தொடர்பு கொள்ளும் பிரதேசம் வரையறைக் குட்படுகின்றன. முன்புபோல நகருக்கு அதிகளவில் மக்கள் செல்வதில்லை.

பகல் நேரங்களில் மடங்களில், திண்ணைகளில் மக்கள் கூடி உரையாடு வதைத் தவிர்த்துள்ளார்கள். வீதியோரங் களில் மக்கள் அதிகள்வில் காணப்பட வில்லை. தொழில் வாய்ப்பு வசதிகள் இல்லாததனால் பெரும்பாலான குடா நாட்டு மக்கள் நிவாரணத்தையே நம்பி இருக்கின்றனர். யாழ் குடா நாட்டில் சுமுகநிலை ஏற்பட்டது போல் தோன்றி னாலும் உண்மையில் அங்கு நிலைமை இன்னும் வழமைக்குத் திரும்ப வில்லை யென்றே பலரும் கருத்துத் தெரிவிக் கின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யாழ் மாவட்டத்தில் உள்ள மக்கள் இன்று சுதந்திரமாக நடமாடக்கூடிய சூழ்நிலையும், அச்சம் இன்றி வாழக்கூடிய நிலையும் முதலில் உருவாக வேண்டும் என்றே விரும்புகிறார்கள்.

"புலிகள் இயக்கத்தினர் இருந்த போது படையினரின் குண்டுத் தாக்குதல்கள், ஷெல் வீச்சுக்கள் ஆகியவற்றால் பயப்பீதி யுடனும், உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்ற அச்சத்துடனும், போதிய உணவுப் பொருட்கள், மருந்துப் பொருட்கள் இன்றியும் வாழ்ந்து வந்தோம் இன்று குண்டுத் தாக்குதல், ஷெல் வீச்சுக்கள் இல்லா விட்டாலும் சுதந்திரமாக நடமாட முடியாமல் அச்சத்துடன் வாழ்கிறோம். நூறு மீற்றருக்கு ஒரு சோதனை நிலையம், மாலையானதும் ஊரடங்குச் சட்டம், இதனால் ஆபத்துக்கு குரல் கொடுத்தாலும் அயலவர்கள் ஓடி வரும் நிலை இல்லை. இந்த நிலை நீங்கி சுதந்திரமாக நடமாடும் நிலை உருவாக வேண்டும் என்றே விரும்புகின்றோம்."

"இடம் பெயர்ந்து சென்ற நாம் அரசாங்கத்தின் அழைப்பை ஏற்று இங்கு வந்தோம். எங்களுக்குப் போதிய நிவாரணப் பொருட்கள் ஒழுங்காகக் கிடைப்பதில்லை. சொந்த இடங்களில் மீளக் குடியமர வருபவர்களுக்கு ஐந்தாயிரம் ரூபா வழங்கப்படுவதாக கூறப்படுகிறது. ஆனால் எமக்கு அந்தப் பணம் கிடைக்கவில்லை. அதனைப் பெறுவதற்காக ஏறி இறங்காத படிகள் இல்லை. பல இலட்சக் கணக்கான சொத்துக்களை உபகரணங்களை ஆடை அணிகளை இழந்து அகதிகளாக சென்ற நாம் மீண்டும் வந்து அல்லல்படுகிறோம். இருப்பதற்கு வீடு இல்லை. உறவினர் நண்பர்கள் வீடுகளில் தங்கி இருக்கிறோம். எத்தனை நாளைக்குத்தான் இப்படித் தங்கியிருக்க முடியும்?"

இவ்வாறு தான் மக்கள் தங்கள் கதைகளைக் கூறி பெருமூச்சு விடுகின்றனர்.

"விவசாயம் செய்வதற்குப் போதிய முதலீடு இல்லை. உரம் கிருமிநாசினி என்பன இங்கு வழங்கப்படுவதில்லை. இதனால் விவசாயத்தை ஒழுங்காகச் செய்ய முடியவில்லை. விவசாயம், தோட்டப் பயிர்ச்செய்கை செய்யும் நல்ல நிலங்கள் படையினரின் பாதுகாப்பு அரண் பகுதிகளுக்குள் உள்ளன. இதனால் விவசாயம் செய்து வருமானம் பெறும் நிலையிலில்லை" இது விவசாயிகளின் கவலை.

"சுதந்திரமாகச் சென்று மீன் பிடிக்க அனுமதி வழங்கப்படவில்லை. பகலில் மட்டும் குறிப்பிட்ட சில மைல் தூரம் சென்று மீன்பிடிக்க அனுமதி வழங்கப்படுகிறது. அதுவும் ஒரு சில மணித்தியாலங்கள் மட்டுமே இவ் அனுமதி வழங்கப்படுகிறது. இதனால் போதிய வருமானம் இல்லை வாழ்வதற்கே கஷ்டமாக இருக்கிறது". இது மீனவர்களின் அங்கலாய்ப்பு.

இதே வேளை யாழ் நகரில் உள்ள வர்த்தக நிறுவனங்களுக்கு புலிகளின் நிதிப் பிரிவு நிதி கேட்டு கோரிக்கைகள் விடுத்துள்ளன என நம்பிக்கையான வட்டாரங்களிலிருந்து அறியவந்தது. படையினரின் பலத்த கட்டுப்பாடுகளுக்கு மத்தியிலும் புலி இயக்க உறுப்பினர்கள் வர்த்தக நிறுவனங்களுக்குச் சென்று நிதியை வசூலித்துச் செல்கின்றனர்.

தற்பொழுது மண்ணெண்ணையும் குடா நாட்டில் தாராளமாகக் கிடைக்கிறது. பெற்றோல், டீசல் போன்ற எரிபொருள்களும் சில இடங்களில் விநியோகிக்கப்படுகிறது.

புலிகளின் "பிஸ்டல் குரூப்" நடமாட்டம் யாழ் நகரப் பகுதியில் இருப்பதாக மக்கள் கூறுகின்றனர்.

இராணுவத்துக்கு தகவல் கொடுப்போருக்கு சில இடங்களில் மரண தண்டனை வழங்கப்பட்டிருப்பதாகவும், இன்னும் சிலர் கடத்தப்பட்டிருப்பதாகவும் கூறினர். யாழ் நகரில் பல முக்கிய பகுதிகள் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. ஊர் திரும்பிய பலரும் தமது சொந்த வீடுகளில் வசிக்க முடியாத நிலையை அவதானிக்க முடிகிறது.

அபூபாதிமா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வன்னி மாவட்டத்தில் தமிழ் - முஸ்லிம் உறவு

ஏ.சி.எல்.ஏ.றஹீம் ஜே.பி.

பல நூற்றாண்டுகளுக்கு மேலாக தமிழரசர்களான பண்டார வன்னியன், வன்னியரசிகள் எனும் பெண் அரசிகளால் ஆளப்பட்ட பிரதேசமே வன்னிப் பிரதேசமாகும்.

அக்காலம் முதல் இப்பிரதேசத்தில் பரவலாக தமிழ் மக்களே வாழ்ந்து வருகின்றனர். சுமார் 150 ஆண்டுகளுக்கு மேல் இப்பிரதேசத்தின் சில பகுதிகளில் முஸ்லிம்களும் தமிழ் மக்களுடன் இணைந்து வாழ்ந்து வருவது சரித்திரச் சான்றாகும்.

வன்னிப் பிரதேசத்தில் முஸ்லிம்களின் வருகை பற்றி ஆராயும் போது அரேபிய நாடுகளிலிருந்தும், தென்இந்திய மாநிலங்களிலிருந்தும் வியாபார நோக்கமாக இலங்கை வந்த முஸ்லிம்கள் தென் இலங்கையின் பல பாகங்களிலும், வடமேல், வடகிழக்கு, மத்திய, வடமத்திய மாகாணங்களில் பரவலாகக் குடியேறினர்.

வன்னிப் பிரதேசத்தைப் பொறுத்த வரை பல்வேறு பகுதிகளிலிருந்து இங்கு வந்து குடியேறியராயினும், பெரும்பாலானோர் வடபகுதி யாழ்ப்பாணம், பூநகரி, கரியல்வயல் என்னுமிடங்களிலிருந்தும், கிழக்கே திருகோணமலை, புல்மோட்டை, மூதூர்ப் பகுதிகளிலிருந்தும், புத்தளம், தம்பபண்ணை ஆகிய பிரதேசங்களிலிருந்தும் முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் பிரதேசங்களில் தமிழ் மக்கள் செறிந்து வாழுமிடங்களில் குடியேறினர்.

தமது இஸ்லாமியப் பண்பாடுகளைப் பேணிப் பாதுகாத்துக் கொண்ட இம்மக்கள் தாம் இணைந்து வாழும் தமிழ் மக்களுடன் மிகவும் அந்நியோன்னியமாக சகோதரர்கள் போல் வாழ்ந்து வந்தனர் என்பது தெளிவு.

மேலும் தாம் குடியேறிய குறுகிய காலத்துள் பல வளங்களையும் பெற்றுத் திகழ்ந்த முஸ்லிம்கள் வன்னித் தொகுதியில் தற்போது நகரங்களாகவுள்ள நிலப் பகுதிகளில் குறிப்பிடக் கூடிய பகுதிகளை தங்களின் உடைமைகளாக்கிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

தமிழ், முஸ்லிம் மக்கள் இணைந்து வாழும் குடியிருப்புக்களையும், அயல் அயலாக அமைந்துள்ள கோயில் திருத்தலங்களையும், பள்ளிவாசல்கள், தைக்கா போன்றவற்றையும் அவதானிக்கும் போது இவ்விரு இனங்களும் எவ்வித இன வேறுபாடுகளுமின்றி சமய அனுஷ்டானங்கள் தவிர்ந்த ஏனைய உறவுகளில் பின்னிப் பிணைந்து வாழ்ந்து வந்திருக்கின்றனர் என்பது புலனாகின்றது.

ஆலயங்கள் அமைப்பதில், கல்விக் கூடங்கள் நிறுவுவதில், பொது ஸ்தாபனங்களை உருவாக்குவதில் இவ்விரு இனங்களும் ஒன்றிணைந்து செயல்பட்டிருக்கின்றன. கிராமத்திலுள்ள தமிழ், முஸ்லிம் பெரியார்களுக்கு உரிய கௌரவமும் மதிப்புமளித்து வந்திருக்கின்றனர்.

தமிழ் மக்களின் கோயில் விஷேடங்கள் திருவிழாக்களுக்கு முஸ்லிம் பெரியார்களும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பள்ளி விஷேடங்கள் ஆகியவற்றிற்கு தமிழ், பெரியார்களும் அழைக்கப்படுவது, கலந்து கொள்வது சாதாரண நிகழ்ச்சிகளாகும்.

வீடுகளில் நிகழும் விஷேட நிகழ்ச்சிகள் மத விஷேடங்கள், திருமண, மரணச் சடங்குகளில் கலந்து கொள்வது, உதவி புரிவது இரு இனமக்களின் நீண்டகால நடைமுறையாகவே இருந்து வந்துள்ளது.

### கல்வி நிலை

முஸ்லிம் பாடசாலைகள் பிரிவு ஏற்பட முன் வன்னிப் பிரதேசத்தில் தமிழ்ப் பாடசாலைகளே தமிழ், முஸ்லிம் பிள்ளைகளின் ஒரே கல்விக் கூடங்களாகத் திகழ்ந்தன. இரு இனப் பிள்ளைகளும் பெற்றோரும் தமது கல்விக் கூடம் என்னும் உணர்வுடன் பாடசாலைகளின் மேம்பாட்டுக்காக உழைத்தனர். பேணிக்காத்தனர்.

அதிபர், ஆசிரியர்கள் முஸ்லிம் பிள்ளைகளின் மத நிகழ்ச்சிகளுக்கு பாடசாலையில் உரிய முக்கியத்துவம் கொடுத்தனர். தாமே முன்னின்று நிகழ்ச்சிகளை நடாத்தியும் உதவினர்.

கல்வித் துறையில் மன்னார் மாவட்டத்தில் தரமான ஓரிரு கல்விக் கூடங்கள் உரிய காலத்தில் அமைந்ததால் அம்மாவட்ட தமிழ், முஸ்லிம் பிள்ளைகளின் கல்வி மேம்பாடடைந்தது. அந்நிலை முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களுக்கு கிடைக்காமையால் இம்மாவட்ட பிள்ளைகளின் கல்வி நிலை பின் தள்ளப்பட்டது.

இங்குள்ள கிராமங்களுள் இவ்விரு இனங்களுக்குள் எவ்வித பிரச்சினைகள், பிணக்குகள் ஏற்படினும் கிராமத்திலுள்ள தமிழ், முஸ்லிம் பிரமுகர்கள், மூத்தோர் அவற்றைத் தீர்த்து வைக்கும் பெருமையினைப் பெற்றிருந்தனர். அவர்களது அறிவுறுத்தல்களினால் சமூகங்களிடையே ஒற்றுமையும் அன்பும் நிலவியது.

இவ்வன்னிப் பிரதேசத்தில் முல்லைத்தீவு, வவுனியா நகர்களை அண்டிய பகுதிகளில் வாழ்ந்த முஸ்லிம்கள் வியாபாரம், விவசாயம் போன்ற தொழில்களையும், மன்னாரையும் அதையடுத்த பகுதிகளிலும் வாழ்ந்தோர் வியாபாரம், விவசாயம் ஆகியவற்றுடன் சங்கு குளித்தல், மீன்பிடி போன்ற கடற்றொழில்களையும், அவ்வக்கிராம தமிழ் மக்களுடன் இணைந்து செய்தனர். வளங்களையும் பெற்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லைத்தீவு நகர், தண்ணீரூற்று, நீராவிப்பிட்டி கிராமங்களில் தமிழ் மக்களின் குடியிருப்புக்களுடன் அயலாகவும் மிக நெருக்கமாகவும் வாழ்ந்து வரும் தமிழ், முஸ்லிம் மக்களிடையே தாம் தமிழ் பேசும் இனமென்னும் ஐக்கிய உணர்வும், ஓர் பரஸ்பர நல்லுறவும் நிலவியதை உணரக் கூடியதாகவிருந்தது.

முல்லை மாவட்டத்தில் தமிழ் மக்களின் வற்றாப்பளை அம்மன் திருநாள் மிகவும் பிரசித்தமானது. அத்திருநாளில் முஸ்லிம் மக்கள் கலந்து சிறப்பிப்பர். ஒரே தினத்தில் பல ஆயிரம் ரூபா வியாபாரம் நடைபெறும், தமிழ், முஸ்லிம் மக்கள் அதை நன்கு பயன்படுத்திக் கொள்வர்.

முல்லைநகர் கரைச்சி நகர் வீரகத்திப் பிள்ளையார் கோயில் நிலம் அக்கால வர்த்தகப் பிரமுகரும் முல்லை நகரின் பிரதான காணிகளின் உடைமையாளருமான மர்ஹூம் தம்பிக்கண்டு மரைக்காயர் அவர்களால் தானம் செய்யப்பட்டதெனவும், தமிழ் மக்களின் நன்மதிப்பைப் பெற்ற அவர் கோயிலில் நடைபெறும் திருவிழாக்களுக்கு அழைக்கப்பட்டு கௌரவமளிக்கப் படுவது வழமையெனவும் கூறப்படுகிறது.

தமிழ், முஸ்லிம் பிரமுகர்களின் கமங்களில் நெல் அறுவடை காலங்களில் எவ்வித ஊதியத்தையும் எதிர்பாராது, தமிழ், முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கலை நிகழ்ச்சிகளுடன் நிறைவு செய்துதவுவதும், வீடுவேய்தல் போன்ற விடயங்களில் உதவியளிப்பதும் பல ஆண்டு காலமாக நிகழ்ந்து வந்த நிகழ்வுகளாகும்.

இப்படியான நிகழ்ச்சிகளின் முக்கிய பங்கு வகித்து வந்த தமிழ் முஸ்லிம் கலைஞர்கள், பெரியார்களில், மாமூலையைச் சேர்ந்த அமரர் றிச்சாட் வாத்தியார் என செல்லமாக அழைக்கப்படும் அரச பாடசாலை அதிபரும், கவிஞரும், பிரபல ஆயுர்வேத வைத்தியருமான நீராவிப்பிட்டி மர்ஹூம் மிஸ்கீன் புலவர் முக்கியமான வராவார். முள்ளியவளையைச் சேர்ந்த பெரியார் அமரர் குட்டித் தம்பி அவர்களும் இத்துறையில் பெரும் புலமை பெற்றிருந்தார். இப்பகுதியில் நடைபெறும் கலை நிகழ்ச்சிகள், விழாக்கள், திருவிழாக்கள் போன்ற நிகழ்ச்சிகளில் இவர்களின் பங்களிப்புக்கள் மிகுந்திருக்கும்.

அக்காலத்தில் ஆங்கில மொழியை கற்றுத் தேறிய சிலரில், அரிசி ஆலை உரிமையாளரான தண்ணீரூற்றைச் சேர்ந்த அமரர் 'மில் இரத்தினம்' என்னும் பெரியாரும் ஒருவராவார். ஆங்கிலேயரின் ஆட்சி நடைபெறும் காலத்தில் அவரது துணிவும் செயல்பாடுகளும் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு உறுதுணையாக இருந்தன.

முல்லை கரைச்சிக் குடியிருப்பு தமிழ் மக்களே கல்வித்துறையில் சிறிது மேம்பட்டிருந்தனர். இவர்கள் யாழ் நகரில் கற்றுத் தேறியவராவர். அவர்களே முதலியார், உடையார், விதானையார் பதவிகளை இப்பகுதிகளில் வகித்து வந்தனர்.

அவர்களது சேவை மனிதாபிமான தாகவும், தமிழ் முஸ்லிம் மக்களின் மேம்பாட்டுக்காகவும் அமைந்திருந்தது. பெருந்தன்மையுடனும் சேவை மனப்பாங் குடனும் பணியாற்றினர்.

காலப்போக்கில் விஞ்ஞானம் வளர, நாகரிகம், அரசியல் விழிப்பு என்பன ஏற்பட்டன. வன்னியில் வேற்றிட ஊடுரு வல்கள் இடம் பெற்றன. மனிதர்களின் ஆசாபாசங்கள் மேம்பட்டன. பண்பாடான மனித நேயங்கள் பின் தள்ளப்பட்டன. பழைமை வாய்ந்த பண்பாடுகள் நாளாவட்டத்தில் மறையத் தொடங்கின.

இருப்பினும் வன்னி மண்ணின் தொன்மையும் தன்மையும் குறையவில்லை என்பதை முஸ்லிம்கள் அம்மண்ணை விட்டு வெளியேறும் வேளை உணரக் கூடியதாக இருந்தது.


## வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பின் புதிய வெளியீடுகள்

1. இலங்கையின் இனப்பிரச்சினையும் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட வடமாகாண முஸ்லிம்களும் தொகுதி 3. முல்லைத்தீவு முஸ்லிம்கள் - விலை ரூபா 150/-
2. வடக்கு முஸ்லிம்கள் எதிர்பார்ப்பது? விலை ரூபா 15/-




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# “கண்ணீரை உண்ட காலங்கள்”

## “பெரு” நாட்டின் போர்க்காலத்து மக்களது கதை

1981ம் ஆண்டு. எனக்கு அப்போது பதினாறு வயதிருக்கும். என் கிராமத்திற்கு ‘கெரில்லாக்கள்’ வந்தார்கள். அப்போது அவர்களிடம் ஆயுதங்கள் இருக்கவில்லை. அவர்கள் வந்து சொன்னார்கள் “நாம் உங்களுக்கு கல்வி புகட்டப் போகிறோம்; கிராமத்தை நாசமாக்குகிற திருடர்கள், சுரண்டல் வாதிகளுக்கெல்லாம் தண்டனை வழங்கப் போகிறோம்” என்று. வீதிகள் அமைப்பதாகவும், சுகாதார நிலையங்கள் அமைத்துத் தருவதாகவும் வாக்குறுதியளித் தார்கள். (ஆனால் இன்று வரை அவை எதுவுமே நடக்கவில்லை).

எனினும் அவர்கள் சொன்னதற்கு மாற்றமாக மக்களைக் கொலை செய்ய ஆரம்பித்தார்கள். முதலில் அவர்கள் தங்களை எதிர்த்தவர்களைத்தான் கொன்றார்கள். இராணுவம் வந்ததன் பின்னர், இராணுவத் திற்கு உதவி செய்வதாக அவர்கள் சந்தேகப்படுகிற அனைவரையும் கொன்றார் கள். இப்படித் தான் அவர்கள் என் பாட்டனையும் கொன்றார்கள். ஆமிக்காரர் களுக்கு ‘தண்ணீர் கொடுத்ததுதான் அவர் செய்த குற்றமாம். நாம் அவருக்காக அழுதோம். அவர் இழப்பு எமக்கு துயர் மிகுந்ததாய் இருந்தது. கெரில்லாக்கள் அவரின் விரல்களை வெட்டி, தொண்டைக் குழியை அறுத்து, அவரது விதையினையும் வேறாக்கிக் கொன்றார்கள். இந்த அநியாயங் களையெல்லாம் நான் கண்ணுற்றேன். நான் காண வேண்டுமென்பதற்காகவே இதனை யெல்லாம் அவர்கள் என் முன்னாலேயே செய்தார்கள்.

இராணுவத்தினர் எம்மிடம் நீர் கேட்பார்கள். நாங்கள் கொடுக்க மறுத்தால் எங்களைப் ‘பயங்கரவாதிகள்’ என்பர். தண்ணீர் புகட்டினால் கெரில்லாக்கள் எங்களைத் “துரோகிகள்” என்பர். ஒரு முறை என் தந்தையைத் தேடி வந்த இராணுவத்தினர் அவரைச் கூட்டிச் சென்றனர். மறுநாள் காலை நாம் அவரது சிதிலமடைந்த, உயிரற்ற உடம்பையே கண்டோம். அதில் இவ்வாறு எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தது.

“எல்லாப் பயங்கரவாதிகளுக்கும் இவ்வாறுதான் சாவு நேரும்”

அன்றுதான் எம் மாபெரும் துயர் தொடங்கிற்று. நாங்கள் அன்றெல்லாம் கண்ணீரைத்தான் உண்டோம். பின்னர் கெரில்லாக்கள் என் சகோதரனையும் பிடித்துச் சென்றார்கள். அன்றின் பின் அவனை நான் காணவேயில்லை. 1983ல் நள்ளிரவு நேரம் பல குடும்பங்களுடன் சேர்ந்து நாமும் இருப்பிடமற்ற அகதிகளானோம்.

இருந்தும் நாம் எம் இருப்பின் இழப்பை மிகத் தாமதித்தே நன்றுணர்ந் தோம். ஒரு பாரிய புலம்பெயர்வுப் பட்டாளத் தின் ஒரு பகுதியாய் நாமும் ஆகிப் போனோம். நிறையக் குடும்பங்கள் தம் இருப்பிடம், காணி, பூமி, விலங்கினங்களை யெல்லாம் விட்டுச் செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டுப் போயின.

நான் என் நடக்க முடியாத பாட்டியை தோளில் சுமந்து வந்தேன். ஒருமுறை நாம் எம் இவ்வாறான நகர்வில் கெரில்லாக்களுக்குப் பயந்து கள்ளிச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செடிகளுக்குள் மறைந்திருந்தோம். அவர்கள்தான் எம்மையும், எம் வாழ்க்கையையும் கொன்றவர்கள். நாம் மலைகளைக் கடக்கையில் என் சகோதரர்களின் குழந்தைகள் எல்லாம் பசியாலும், களைப்பாலும் மயங்கிப் போயினர். எம்மிடம் போர்வைகள்தான் இருந்தன. அவையே எம் ஒரே இருப்பிடமாயும் போனது.

நகருக்கு வந்தாயிற்று. அங்கு கூட நாம் பாதுகாப்பை உணரவில்லை. தயக்கமும், சந்தேகச் சஞ்சலங்களுமே ஏற்பட்டன. மக்களெல்லாம் எம்மை ஒரு மாதிரியாகப் பார்த்தார்கள். 'பயங்கரவாதிகள்' என்று அழைத்தார்கள். போக்கிடமற்ற அகதிகள் நாங்கள் என்று எம்மால் சொல்ல முடிய வில்லை. பயம்; சொல்வதற்குக் கூடப்பயம். எம்மை வயல்களுக்கும், தோட்டங்களுக்கும் வாடகைக் கூலிகளாய் அழைத்துச் சென்றனர். அங்கே அவர்கள் ஒரு வேளைச் சாப்பாடுதான் எமக்குத் தந்தனர். "ஹீனாகயோவுக்கு" வந்தபோது பல நாட்களாக வீதிகளில்தான் தூங்கினோம். ஒரு பெண்தான் எம்மீது இரக்கப்பட்டு ஒரு வீட்டின் ஒதுக்குப்புற அறையொன்றில் எங்களைத் தங்கச் செய்தாள். அது வரை வீதிகள்தான் எங்கள் உறைவிடமாய் இருந்தது. அவ்வறைக்கு வாடகை கொடுப்பதற்கு பதிலாக அவ்வீட்டினைச் சுத்தப்படுத்தும் வேலைகளை நாம் செய்தோம். எமது பல நாட்கள் சாப்பாடில்லாமலேயே கழிந்தது.

முதலில் இரவு வேளைகளில்தான் நான் பயப்பட ஆரம்பிப்பேன். இராணுவத்தினர் அல்லது கெரில்லாக்கள் என்னை கொன்றுவிட வருகிறார்களோ என்று பயந்து ஓட்டைகளால் வீதியெங்கும் பார்ப்பேன். என், வயதான தாயை நான் எப்போதும் துயரங்களோடுதான் காலையில் எதிர் கொள்வேன். எம்மிடம் இருந்த தானிய வகைகளெல்லாம் முடிந்தும், பண்டமாற்றாய் பயன்படுத்திய பின்பும் பணத்தின் தேவை எம்மில் அதிகரித்தது. பணமுழைப்பது பற்றியும், சந்தைகளில் சாமான்கள் வாங்குவது பற்றியும் நாம் கற்றுக் கொண்டோம். நாம் ஏழைகள், போக்கிடமற்ற விவசாய அகதிகள் என்றெம்மை அடையாளம் காண்பவர்கள் எம்மை ஏமாற்றி துன்புறுத்தலானார்கள்.

மெதுவாய், மிக மெதுவாய் நாம் எம் வாழ்வை மீளக் கட்டியமைக்கத் தொடங்கினோம். புலம் பெயர் மக்கள் சங்கமொன்றில் நான் இணைந்து அவர்களது உரிமைகள் பற்றி சொல்லிக் கொடுத்தேன். அதேவேளை பணத் தேவையை நிறைவேற்ற உடைகள் கழுவியும், வீடுகள் துப்பரவாக்கியும், தையல் தொழில் செய்தும் வாழ்ந்தேன். இன்றும் கூட நாம் இருவேளைதான் சாப்பிடுகிறோம். எம்மைச் சூழவுள்ள சிறுவர்கள் போஷாக்கின்மையாலும், நோயினாலும் பீடிக்கப்பட்டிருப்பதை என்னால் அவதானிக்க முடிகிறது.

புலம்பெயர்ந்தோர் அமைப்பொன்றைக் கட்ட விரும்பிய 'எஸனோன் ராமிராஸ்' போன்ற எம்முடைய பல தலைவர்கள் கொல்லப்பட்டார்கள். அவரை அவரது வீட்டிலிருந்து கடத்திச் சென்று துன்புறுத்திக் கொன்றார்கள். அவரை யார் கொன்றார்கள் என்பதுதான் இன்று வரைத் தெரியவில்லை. இப்படியெல்லாம் இருந்தும் நாம் இன்று வரை எமக்கு அகதிகள் என்ற உத்தியோகபூர்வ அந்தஸ்த்து வழங்குமாறு 'பெரு' நாட்டு அரசாங்கத்தை நிர்ப்பந்தித்தே வருகிறோம். எங்களுக்கொரு நல்ல வாழ்வை அமைத்துத்தர, அல்லது எம்மை எம் கிராமங்களில் பாதுகாப்பாய் மீளவும் வாழ வழி செய்கிற ஏதாவது முயற்சிகளில் இறங்குமாறு அரசை நாம் கோரி வருகிறோம். எம்மீது அடிக்கடி இழைக்கப்படுகிற அநியாயங்களிலிருந்து பாதுகாப்புத் தேடித்தான் நாம் எம் இருப்பிடம் விட்டுப் புலம் பெயர்ந்தோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சில குடும்பங்கள் மீண்டும் போக விரும்புகின்றனர். சிறியளவிலாவது அவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படாத நிலையில் அவர்கள் போக விரும்புகின்றனர். மற்றக் குடும்பங்கள் இன்னும் வன்முறைக்கும் பயங்கரத்துக்கும் பயந்து இருப்பிடம் தந்த மக்கள் கூட்டத்தில் தங்களை இணைத்து வாழ விரும்புகிறார்கள். அதிகமான மலைசார் கிராமங்கள் மிக மோசமான குண்டுத் தாக்குதல்களாலும், பதியப்படாத அட்டூழியங்களாலும் புறந்தள்ளப்பட்டு கைவிடப்பட்ட நிலையிலேயே இருக்கின்றன.

சில இடங்கள் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. அங்குள்ளவர்கள் இராணுவத்தினரின் கெடுபிடிக்கே ஆளாகின்றார்கள். அவர்கள் மக்களிடம் எதையாவது கேட்டுப் பெற்றுக் கொள்கிறார்கள். அங்குள்ளவர்கள் பெரிதாக எதையும் செய்ய முடியாதவர்களாகவே இருக்கிறார்கள். சில சமூகத்தினர் தங்களுக்குள்ளே சில பாதுகாப்பு அமைப்புக்களை உருவாக்கியுள்ளனர். அவர்களில் அனேகம் பேர் "சிறுபிள்ளைகளைக் கூடக் கொல்கிற கெரில்லாக்களின் தாக்குதலில் இருந்து பாதுகாப்புப் பெற பங்கர்களுக்குள்ளேயே உறங்குகிறார்கள். இது மட்டுமல்லாமல் இப்போது 'பெரு' நாட்டின் பொருளாதார நிலைமை பற்றியும் பேசப்படுகிறது. ஐம்பது வீதத்திற்கும் அதிகமான 'பெரு'வியர்கள் வறுமைக் கோட்டிற்கும் கீழே தான் இருக்கிறார்களாம். வளங்கள் இன்னும் ஏழைகளைச் சென்றடையவில்லை.

நாம் எம் வாழ்க்கை புலம் பெயர்வு/ ஊரற்ற நிலைகளிலேயே கழிந்து விட வேண்டுமென்று விரும்பவில்லை. நிழல்களில் தங்கியிருப்பதான வாழ்க்கையும், மறக்கடிக்கப்பட்ட யுத்த பாதிப்புச் சமூகமாகவும் இருக்கவும் நாம் விரும்பவில்லை. 'பெரு'வில் அமைதி , சமாதானம் நிலவுமாயின் அது எம் குழந்தைகளால்தான் கட்டியெழுப்பப்படும். பயணங்களிலே பிறந்த எம் குழந்தைகளே புது மாற்றத்தையும் பிரசவிப்பார்கள்.

அந்த எம் வாரிசுகளுக்காக நாம் கேட்டுப் பெற்றுக் கொள்ள வேண்டியது நிறையவுள்ளது.

மூலம் : **Isabel Suasnabar Huarocc**
தமிழ்வடிவம் : எம். கே. எம். ஷகீப்
நன்றி : **World Refugee Survey 1995**

"சவால்களை மன உறுதியுடன் எதிர்த்து நிற்காமல் ஓடி ஒளிந்து புகலிடம் தேட முயற்சி செய்த எந்த ஒரு சமூகமும் உலக வரலாற்றில் அழிவை விட்டுத் தப்பியதில்லை. ஏனெனில் போராட்டக் களத்தை எதிர்நோக்கத் தயங்குவதும், ஓடி ஒளிந்து கொண்டு பாதுகாப்புத் தேடுவதும் கோழைத்தனத்தின் அறிகுறிகளாகும்."



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சமாதானம் எப்போது எப்படி கிடைக்கும்?

அப்துல்லாஹ் ஜான்

இன்று உலக நாடுகளைப் பார்த்தால் பிரச்சினை இல்லாத நாடு ஒன்றையேனும் காணமுடிவதில்லை. ஆணுக்கும் பெண்ணுக்குமிடையில் பிரச்சினை, குடும்பத்தில் சகோதரர்களுக்கிடையில் பிரச்சினை, கறுப்பர் - வெள்ளையர்களுக்கிடையில் பிரச்சினை, வேற்று மொழிகளை பேசுபவர்களுக்கு இடையில் பிரச்சினை -இனங்களுக்கிடையில் பிரச்சினை, நாடுகளுக்கிடையில் பிரச்சினை. உலகமே பிரச்சினையும் மோதல்களும் நிறைந்த இரு களமாக மாறி வருகின்றது. எமது நாடான இலங்கையை எடுத்துக் கொண்டால் இங்கும் பிரச்சினை -மோதல். இந்த மோதல்களால் ஏற்படும் நன்மைகளை விட கெடுதிகள் தான் ஏராளம்.

எமது நாட்டில் புரையோடிப் போயுள்ள இந்தப் பிரச்சினையானது இரு இனங்களுக் கிடையிலானது. இந்தப் பிரச்சினையானது இதுவரை 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உயிர்களை பழிகொண்டு கோடான கோடி சொத்துக் களை நாசமாக்கியுள்ளது. அதைவிட எத்தனையோ மனிதர்கள் விலை மதிக்க முடியாத தமது உறுப்புக்களை இழந்து அனுதினமும் வேதனையுடன் வாழ்ந்து வருகின்றனர். ஏழு இலட்சம் பேர் தமது வீடுவாசல்களை இழந்து அகதி முகாம்களிலும் மர நிழல்களின் கீழும் வாழ்ந்து வருகின்றனர். இன்னும் ஆயிரக் கணக்கான உயிர்களையும், பொருளாதாரத் தையும் அழிக்கக்கூடிய இந்த உள்நாட்டுப் போர் தேவைதானா? இப்பிரச்சினையை வரலாற்று ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் ஆராய்வது பயனளிக்கக் கூடியதாக இருக்கும்.

இலங்கையின் பெரும்பான்மைச் சிங்களவர்களுக்கும் சிறுபான்மைத் தமிழர்களுக்கும் இடையிலான மோதல் களுக்கு வித்திடப்பட்டது 1950களின் நடுப்பகுதியிலாகும். ஒரு பெரும்பான்மை தமது சிறுபான்மைச் சமூகத்தை நசுக்க முயன்ற செயலே இனப்பிரச்சினைக்கு வித்திட்டது. இதற்கான முழுப் பொறுப்பை யும் பெரும்பான்மைச் சமூகத்தவர்கள் ஏற்றேயாக வேண்டும். மக்களை மாக்களாக்கி இனத்துவேசத்தை தூண்டி விட்டு ஆட்சியமைத்த கொடுங்கோலர்கள் இன்றைய அழிவுகளுக்கும் நாசங்களுக்கும் பொறுப் பேற்றாக வேண்டும். இவ்வாறான கொடுங்கோலர்களுக்கு ஆயுத ரீதியான போராட்டமானது சிறந்த படிப்பினையைக் கொடுத்துள்ளது. மற்ற இனத்தவர்களையும் மதிக்க வேண்டும் என்ற சிந்தனையை தூண்டி விட்டுள்ளது. தவறு செய்பவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். ஆனால் தவறு செய்தவர்கள் திருந்தி விடுவார்களானால் அவர்களை மன்னிப்பது மனித நேயத்தின் அடையாளமாகும்.

அரசானது தவறுகளை உணர்ந்து தம்மாலியன்றதை உச்சபட்சம் கொடுக்க முன்வரும் போது அதனை ஏற்பதா? அல்லது தட்டிக்கழிப்பதா? என்பது மிகவும் சிக்கலான ஒரு கேள்வியாகும். ஆனால் மன்னிப்பது என்பதுதான் மனித நேயத்தின் செயலாகும். இது இலங்கையின் வரலாறும் உலக வரலாறும் எமக்குத் தரும் படிப்பினையாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இலங்கை சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் ஏனைய இனத்தவர்களைக் கொண்ட நாடாகும். காலத்துக்குக் காலம் சிங்கள - முஸ்லிம் கலவரம், தமிழ் - முஸ்லிம் கலவரம், சிங்கள - தமிழ் கலவரம், கிறிஸ்தவ - முஸ்லிம் கலவரம் என்பன ஏற்பட்டு பின்னர் அவை சுமூகமாக தீர்க்கப்பட்டதைக் காணலாம். அது மட்டுமல்ல மோதல் நேரத்தில் மிகவும் வைரியாக இருந்தவர்கள் கூட சமாதானம் ஏற்பட்ட பின்னர் ஐக்கியமாக முன்பு போல் ஒற்றுமையாக வாழ்வதைக் காணலாம். அவர்கள் மோதலை நினைத்து ஐக்கியத்தை மறந்து விட்டிருந்தால் இன்று இலங்கையில் எல்லா இனங்களும் மோதிக் கொண்டே யிருக்கும்.

அது மட்டுமல்ல ஒரு பெரும் பான்மையினமானது இன்னொரு சிறுபான்மையை நசுக்க முயல்வதும் இயற்கையானதாக உள்ளது. சிங்கள பெரும்பான்மை அதிகாரத்தில் இருந்து எவ்வாறு தமிழ் சிறுபான்மையை நசுக்கியதோ அதே போன்று அல்லது அதை விட கொடூரமாக தமிழ் சிறுபான்மையைச் சேர்ந்த ஆயுதக் குழுக்கள் முஸ்லிம்களை நசுக்கியதை வரலாறு என்றும் மறக்காது. ஆனால் முஸ்லிம்கள் அதை மறந்து விட்டார்கள். அப்படியில்லாவிட்டால் இங்கு சிங்கள சமூகத்துக்கு எதிராக தமிழர்கள் ஆயுதமேந்தி போராடுவது போல் முஸ்லிம்களும் ஆயுதமேந்தி போராடிக் கொண்டிருப் பார்கள். யதார்த்தத்தை உணர்ந்தால் மனித நேயம் மதிக்கப்படும் என்பதில் ஐயமில்லை.

வடக்கு, கிழக்கில் எத்தனையோ முஸ்லிம்கள் அநியாயமாக கொல்லப் பட்டுள்ளார்கள். அவர்களுடைய உடமைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. இதை விட ஒரு படிமேலாக வடமாகாண முஸ்லிம் களின் வதிவிட உரிமை கூட பறிக்கப்பட்டுள்ளது. அந்த இழிசெயல் களைக் கூட முஸ்லிம்கள் மன்னிக்கத் தயாராக இருக்கும் போது சிங்கள பெரும்பான்மையை ஏன் தமிழர்கள் மன்னித்து உச்சபட்ச தீர்வொன்றைப் பெற்றுக் கொள்ளக்கூடாது?

உலகிலுள்ள ஏனைய நாடுகளுக்கு விஜயம் செய்து பார்த்தால் இலங்கை யிலுள்ள மக்கள் எந்த அளவுக்கு கொடுத்து வைத்தவர்கள் என்பது புலனாகும். இலவச மருத்துவம், இலவசக் கல்வி, நீர்ப்பாச னத்திட்டம், வீதி அபிவிருத்தித் திட்டம் இப்படி இலங்கை தனது மக்களுக்கு வளமான வாழ்வை அமைக்க முயற்சி செய்து கொண்டுள்ளது. அபிவிருத்தித் திட்டங்களில் தமிழர் வாழும் பிரதேசங்கள் புறக்கணிக் கப்பட்டாலும் இலவசக் கல்வி, இலவச மருத்துவத் துறைகளில் எந்த இனத்தவரும் புறக்கணிக்கப்படவில்லையே. மறுபுறம் தமிழர் வாழும் பிரதேசங்கள் தாமாகவே அபிவிருத்தியடைந்த, அடையக் கூடிய பிரதேசங்கள்தானே.

1980ம் ஆண்டுக்கு முற்பட்ட காலப்பகுதியை எடுத்து நோக்கின் வடக்கு கிழக்கு பிரதேசங்கள் அமைதி நிறைந்த அபிவிருத்தியடைந்த பிரதேசங்களாகவே காணப்பட்டன. கடந்த 15 வருடகால யுத்தத்தில் வடக்கு கிழக்கு தொடர்ச்சியான அழிவுகளுக்கு உட்பட்டாலும் அங்கு பஞ்சம், பட்டினி என்பன ஏற்படவில்லை. எல்லா அழிவுகளுக்கும் முகம் கொடுத்து தமிழர் பிரதேசங்கள் இன்றும் தலை நிமிர்ந்து வளமுடனேயே காணப்படுகின்றன. இராணுவம் கைப்பற்றியுள்ள பிரதேசங் களில் அமைதி திரும்பி விட்டது என்பது கனவாக இருந்தாலும் ருவாண்டாவில் நடந்த மனித படுகொலைகளைப் போல் இலங்கை இராணுவம் எதையும் செய்து விட வில்லையே. தமது செயற்பாடுகள் தாக்குதல்களை நிதானமாக திட்டமிட்டே இலங்கை இராணுவம் மேற் கொள்கின்றது. தாக்குதலுக்கு தாக்குதல் இது மனிதனின் இயற்கைப் பண்பு. எனவே தாக்குதலின் பின்னால் ஏற்பட்ட விளைவுகளுக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முதலில் தாக்கியவர்கள் தான் பொறுப்பேற்க வேண்டும். மனிதன் ஆத்திரமடையும் போது மிருகமாக மாறுகின்றான். அதன் காரணமாக அவன் ஏலவே முதலில் தாக்கியவர்களை குற்றம் சுமத்துவதா? இந்தக் கேள்விக்கு விடைகண்டால் இலங்கையில் உள்ள இனப்பிரச்சினையை தீர்ப்பது இலகுவான ஒரு விடயம்.

சமீப காலத்தில் அரசியல் யாப்பில் திருத்தங்கள் கொண்டுவர முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. பேச்சு வார்த்தை மூலமே இனப்பிரச்சினை தீர்க்கப்பட முடியும் என்ற கருத்தும் மேலோங்கி நிற்கின்றது. இவையெல்லாம் சிங்கள பெரும்பான்மையினர் தமது தவறுகளை உணர்ந்து விட்டதனைக் காட்டுகின்றது. இந்நிலையில் பேச்சு வார்த்தைக்கு நிபந்தனைகளை விதிப்பதானது அமைதிக்கு வைக்கப்படும் ஆப்பு ஆக இருக்கின்றது. பேச்சுவார்த்தைக்கு அரசு விதிக்கும் நிபந்தனைகளில் நியாயங்கள் இருக்கத்தான் செய்கின்றது. பேச்சுவார்த்தைகளில் பிரபாகரன் நேரடியாக கலந்து கொள்ள வேண்டும் என்பது ஒரு நிபந்தனை. இது நியாயமானது. ஏனெனில், புலிகள் இயக்கத்தில் யார் எந்தக் கருத்தை முன்வைத்தாலும் அதனை இயக்கத்தின் கருத்து அல்ல என்பதாகக் கூறக்கூடிய வல்லமை பிரபாகரனுக்கு உண்டு. எனவே இயக்கத்தில் ஏனைய அங்கத்தவர்கள் கலந்து கொண்டு எடுக்கும் முடிவானது பிரபாகரனால் நிராகரிக்கப்படலாம். மேலும் பிரபாகரன் ஒருவரே தமிழினத்தின் உரிமைகள், தேவைகள் எவை என்பதாக தீர்மானிக்கக் கூடியவராக உள்ளார். அவர் கலந்து கொள்ளாத பிரச்சினைகள் அர்த்தமற்றவை என்பது கடந்த கால அனுபவம். பேச்சுவார்த்தை குறுகிய காலத்துக்குள் முடிக்கப்பட வேண்டும். என்பது இரண்டாவது நிபந்தனை. இந்த நிபந்தனை யதார்த்தமான ஒன்று. ஏனெனில் கடந்த காலங்களில் பேச்சுவார்த்தை நடைபெற்ற காலங்களில் புலிகள் தம்மை பலப்படுத்திக் கொள்வதற்கான முனைப்புகளில் ஈடுபட்டார்களே ஒழிய உண்மையான பேச்சுவார்த்தையில் ஈடுபடவில்லை. மேலும் நீண்ட காலத்துக்கு நடைபெறும் பேச்சுவார்த்தைகளால் தீர்வு ஒன்றைத் தரமுடியாது என்பதும் கடந்தகால அனுபவம். ஆனால் ஆயுதங்களை கையளிக்கச் சொல்லுவது தற்கொலைக்கு ஒப்பான செயல். அதுவே பேச்சுவார்த்தைக்கு ஒரு ஆப்பை வைக்கிறது.

அதே போன்று புலிகள் விதிக்கும் நிபந்தனைகளில் நியாயங்கள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் நடைமுறைச் சாத்தியமற்ற நிபந்தனைகளாக உள்ளன. இராணுவம் தமது பழைய நிலைகளுக்கு திரும்ப வேண்டுமென்பெது நியாயமற்ற ஒரு நிபந்தனை. புலிகள் கடந்த காலங்களில் நம்ப நடக்கவில்லை. அதனால் அரசு இந்த நிபந்தனையை ஏற்று நடக்கும் என்பது ஒரு கனவாகவே இருக்கும். இந்த நிபந்தனை புலிகள் பேச்சுவார்த்தையை விரும்பவில்லை என்பதாக காட்டுகின்றது. ஏனெனில் பேச்சு வார்த்தை மூலம் ஒரு தீர்வு ஏற்படின் வடக்கு கிழக்கில் இருந்து இராணுவம் முற்றாக வாபசாகி விடும். தீர்வு ஏற்பட முன்பு வாபசாக சொல்லுவது ஜீரணிக்க முடியாத ஒரு நிபந்தனையாக உள்ளது. இரண்டாவது புலிகளை தமிழர்களின் ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக் கொள்ளச் சொல்லுவது, இந்த நிபந்தனை மக்கள் நிர்ணயிக்க வேண்டிய ஒன்று. புலிகள் இன்றி பேச்சுவார்த்தையை நடத்த முடியாதென்பது இந்த நிபந்தனையை அரசு ஏற்றுக் கொண்டதற்கு அடையாளம் தான்.

யுத்தம் கடந்த 15 ஆண்டுகளாக தொடருகின்றது. புலிகளும் படையினரும் ஆயுதங்களையும் சேர்த்த வண்ணமே உள்ளனர். ஆயுதம் மூலம் சமாதானம் பிறந்ததாக உலக வரலாறே கிடையாது. இஸ்லாமிய வரலாற்றிலே பெரும் பெரும் போர்கள் நடைபெற்று இருந்தாலும் மக்கா வெற்றி,ஒரு துளி இரத்தம் சிந்தப்படாமல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கிடைத்தது. பலஸ்தீன் இஸ்ரவேல் பிரச்சினையை எடுத்துக் கொண்டால் அது கடந்த 50 வருடகாலமாக நடைபெற்று வருகின்ற ஒரு போராட்டமாக காணப்படு கின்றது. பலஸ்தீன விடுதலைப் போராட்டத் துடன் புலிகளின் விடுதலைப் போராட்டத்தை ஒப்பிட முடியாது. என்றாலும் போராட்டத் தின் காலஅளவை எடுத்துக் கொண்டால் மிகவும் நீண்ட காலத்துக்கு இலங்கையில் நடக்கக் கூடிய போராட்டமானது தேவையற்றது. 50 – 60 வயதுடைய மனிதன் தனது ஆயுள் முழுவதும் யுத்தத்துக்குள் சிக்கி அவலப்பட்ட வாழ்க்கை வாழ்வதை விட கிடைக்கக் கூடிய உரிமைகளுடன் சந்தோச மாக வாழ்வது மேலாகும்.

உயிரிழந்த போராளிகளின் கொள்கை மகத்தானதாக இருக்கலாம். அவர்கள் தமதுயிரை தியாகம் செய்தது நாளைய சமூகம் தலை நிமிர்ந்து வாழ வேண்டும். என்பதற் காகத்தான். தற்போது அரசு, கேட்கும் உரிமைகளைத்தர தயாராக உள்ளது. அதுவே போராட்டம் பெற்ற வெற்றிதானே. ஈழத்தமிழர் இலங்கை நாட்டில் படும் அல்லல்களுக்கு பேச்சு வார்த்தை மூலமான தீர்வு நிரந்தர நன்மை பயக்கக் கூடியதாக இருக்கும்.

ஆக அரச தரப்பாரும் புலிகளும் சிந்தித்து செயல்பட வேண்டும். அகதிகளாக அநாதைகளாக வாழ்வது எவ்வளவு அவலமானது என்பது நாங்கள் அனுபவ ரீதியாக உணர்ந்த ஒன்று. எந்த இனத்த வர்களாக இருந்தாலென்ன அவர்களும் நாங்கள் படும் அவஸ்தையைப்படக்கூடாது என்றே எண்ணுகிறோம். எனவே தற்போது ஏற்பட்டுள்ள பேச்சுவார்த்தைக்கான சுமூக நிலைகளை இரு தரப்பாரும் பயன்படுத்திக் கொண்டு நிரந்தர தீர்வு ஒன்றைக் காண வேண்டும். தீர்வு கிட்டினால் அமைதி பிறக்கும். அமைதி பிறந்தால் மூவினத்துக்கு மிடையில் ஒற்றுமை பிறக்கும். நாம் ஒற்று மைப்பட்டால் எமது நாடு வளம் பெறும்.

சமாதானம் ஏற்பட இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்வோமாக!

## தொண்டர் ஆசிரியர்கள் தொடர்பாக அரசியல்வாதிகள் முயற்சி எடுப்பார்களா?

கடந்த ஆறு வருடங்களுக்கு மேலாக வடக்கிலிருந்து புலிகளினால் வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மாணவர் களுக்கு புத்தளம் மாவட்டத்தின் பல பாடசாலைகளில் நூற்றுக்கும் அதிகமான ஆசிரியர்கள் தொண்டர் களாக கற்பித்துக் கொண்டிருக்கின்றனர்.

இவர்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவு கள் கடந்த காலங்களில் ஒக்ஸ்பாம், நோராட், போரூட் ஆகிய அரசுசார்பற்ற நிறுவனங்களாலேயே வழங்கப் பட்டு வந்தன.

இக் கொடுப்பனவுகள் கடந்த வருடம் திடீரென நிறுத்தப்பட்டதால், பலதரப்பட்ட முயற்சியின் பின்னர் நெதர்லாந்து அரசின் அனுசரணையுடன் தொடர்ந்தும் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வந்தன. இக் கொடுப்பனவும் 1997 மார்ச் மாதத்துடன் நிறுத்தப்பட்டதால் இத் தொண்டர் ஆசிரியர்கள் பல துன்பங்களுக்கு ஆளாகியுள்ளனர். மேலும் பல ஆயிரக் கணக்கான மாணவர்களும் – குறிப்பாக அகதி மாணவர்களும்– பாதிக்கப் பட்டுள்ளனர்.

இது இவ்வாறிருக்க, புத்தளம் தொகுதி யிலுள்ள 54 தமிழ் மொழிப் பாடசாலைகளுள் 400 க்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. தற்போது இத் தொண்டர் ஆசிரியர்களும் சேவையை விட்டும் இடை நிறுத்தப்படும் போது ஆசிரியர் தட்டுப்பாடு மாணவர்களை மேலும் கடுமையாக பாதிக்கப் போகிறது.

இத் தொண்டர் ஆசிரியர் பிரச்சினை சம்பந்தமாக NMRO உட்பட பல அகதிகளுக்கான அமைப்புக்களும் உயர் கல்வி அமைச்சுக்கு எடுத்துக் கூறியும் இதுவரையில் இவர்களது பிரச்சினை தீர்க்கப்படாதது இவ் ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் எதிர்காலத்தை கேள்விக்குள் ளாக்கியுள்ளது. ஆகவே இனியும் காலம் தாழ்த்தாது உடனடியாகவே உயர் கல்வி அமைச்சு இது விடயத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வடக்கு முஸ்லிம்களின் நலனில் அக்கறையுள்ள அரசியல் வாதிகள் இதற்காக தங்களால் முடிந்த ஆக்க பூர்வமான முயற்சிகளை எடுக்க வேண்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. அரசியல்வாதிகள் முயற்சி எடுப்பார்களா?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புறக்கணிக்கப்பட்ட நிலையில் வடமாகாண முஸ்லிம்கள்

Eng. முஹம்மது ராபி

வடமாகாண முஸ்லிம்களே ஒன்று படுங்கள், ஒடுக்கப்பட்ட மறுக்கப்பட்ட, கொள்ளையடிக்கப்பட்ட எமது உரிமைகளுக்காக, உயிர்களுக்காக, உடமைகளுக்காக குரல் கொடுக்க ஓரணி திரளுங்கள். ஆயுதபலமோ, அரசியல் பலமோ அற்ற நமக்கு நமது ஒற்றுமையே எமது அச்சாணியாகும். வேண்டாம் நமக்குள் அரசியல் வேறுபாடு, ஐக்கியப்பட்டவர்களாக எடுத்துச் சொல்வோம். ஓங்கிச் சொல்வோம். எமது பிரச்சினைகள் என்னவென்று, எதுவென்று -தீர்வுகளையும் நாமே சொல்வோம் நீதியாக, நியாயமாக. இதற்கு உரிமை மறுக்கப்பட்ட நாமே உரித்துடையவர்கள்.

மக்களே, நாம் மறந்து விட்டோமா எமது மண்ணை, காலமும் நேரமும் எம்மை எமது மண்ணில் இருந்து நிரந்தரமாகவே பிரித்து விடுமா? அதனை மறந்துவிடுவதும் - மீட்டெடுப்பதற்கான முயற்சியில் எம்மை நாம் இணைத்துக் கொள்ளாது எப்போதும் சுய நலத்திலேயே வாழ்நாளை வீணடித்துக் கொண்டிருப்பதும் எமது பரம்பரைக்கே நாம் செய்யும் துரோகத்தனம் இல்லையா?. எமது சட்டைப்பையில் தீப்பற்றும் வரையிலும் நாம் சுயநலத்துடன் வாழப் போகிறோமா?. சமூகத்தினதும், சமுதாயத்தினதும் சீரழிவை இந்த சுயநலப்போக்கு உச்சத்திற்கு உயர்த்தி விட்டிருப்பதை எப்போது நாம் உணரப் போகிறோம்.

மறந்து விடப்பட்டிருக்கும் வடமாகாண முஸ்லிம் சமுதாயமே! ஆம் மறுக்கப்பட்டிருக்கும் நமது உரிமைகளை இன்று நீ - உணர மறுப்பாயானால் - அதனை வென்றெடுக்க திரளும் அணியுடன் இணைய மறுப்பாயானால் - தங்கி நின்று விலகிவிடுவாயானால் - வழமைபோல் உனது சுயநலப் போக்கினால் இதனை புறக்கணித்து விடுவாயானால் - இதனால் ஒரு வேளை உனது அற்ப சொற்ப சலுகைகளை இழந்திட நேரிடுமோ என்ற சந்தேகத்தினால் இதனை நசுக்கிட முனைவாயானால் நீ - எமது சமூகத்தின் துரோகி என்று நீயே உன் நெற்றியில் பச்சை குத்திக்கொள்.

நாளை இந்த சமூகத்தின் அகதி அடையாள 'பச்சை அரிசி' கூட நிறுத்தப் படலாம். இப்போது அதுவரை காலமும் நீ ஒழிந்து கொண்டிருந்த இந்த சமுதாயம் பிச்சை எடுக்க வீதிக்கு வரும். பசியை விரட்ட சமூகத்தின் கலாசாரம் காற்றில் கரையும். அப்போது இந்த சமூகத்தின் உரிமை மறுப்புக்கும், இழி நிலைக்கும் குரல் கொடுக்க யாரும் இருக்க மாட்டார்கள். யாராவது கேட்டாலும் தட்டி மடக்கப்பட்டு விடுவார்கள், தடயமே தெரியாமல் அழிக்கப்பட்டும் விடலாம்.

எமது சமூகத்தின் அழிவிலும், இழிவிலும் வளர்ச்சி பெற்றுக் கொண்டிருக்கும் சில புல்லுருவிகளை, ஒட்டுண்ணிகளை இனம் கண்டு அவர்களிடம் இருந்து இந்த சமூகத்தை மீட்டெடுக்கு முகமாக இனியாவது நாம் விழித்துக் கொள்வோம். எமது சமூகச் சீரழிவையும், ஒழுக்கக்கேட்டையும் தடுத்து நிறுத்த வேண்டாமா?. வாழ்க்கையின் அடிபட்ட வாழ்வோடு போராடி விரக்தியோடு நாட்களை விரட்டிக் கொண்டிருக்கும் எமது சமூகத்திற்கு விடிவு வேண்டாமா? நாளை என்றொரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எதிர்காலத்தையே மறந்து விட்டு அல்லது மறக்கடிக்கப்பட்டு வாழ்வின் எஞ்சிய நாட்களையும் முடிவித்து விட கிடைப்பதை உண்டு நடைப் பிணமாக அலைந்து கொண்டிருக்கும் எமது சமூகத்திற்கு விடிவு வேண்டாமா?. கொதிக்கும் மணலும், வெயிலும், வானம் பார்க்கும் கூரையும், அழுக்குடனேயே சேர்ந்து வளர்ந்து கொண்டிருக்கும் எமது இளம் சமுதாயத் தினரின் – எதிர்காலம் இருட்டோடும், இரவல் கொட்டில்களுடனும்தானா?.

சீரழிந்து விட்ட எமது வாழ்க்கையின் விடிவு எமது எழுச்சியும், விட்டுக் கொடுப்பும், புரிந்துணர்வும், தியாகச் செயலும் இன்றி நிச்சயமாக நடைபெற மாட்டாது என்பதை எமது கடந்த காலங்களும் குறிப்பாக கடந்த ஆறு வருடங்களும் இதனை மிக நிதர்சனமாக தெட்டத் தெளிவாக்கிக் கொண்டிருக்கின்றன. எனவே இன்றைய எமது நிலைமையை மாற்றி அமைக்க எம்மை மாற்றிக் கொள்ள நாம் முயற்சிப்போம். அன்றேல் எமக்கொரு விடிவு என்றுமே விடியாத இரவாகி விடும். அதுதான் இறை நியதியும் கூட.

தூய்மையான எண்ணத்துடனும் தெளிவான சிந்தனையுடனும் இறைவனுக் காக செய்யப்படும் சிறிய முயற்சி கூட அவனிடத்தில் மிகப் பெறுமதி வாய்ந்ததாக அமையும். அது இறைவன் எம்மை வழி நடாத்திச் செல்ல துணையாக அமையும்.

எனவே எமது வேறுபாடுகளை கலைந்து விட்டு, சுயநலச் சிந்தனைகளை தொலைத்து விட்டு ஒருமித்த குரலுக்காக உறுதியுடன் ஒன்றுபடுவோம். இதனடிப் படையில் நாம் எமது துக்ககரமான வெளியேற்றத்தினை எதிர்கொள்வோம். எமது நோக்கங்களை அடையும் முயற்சியில் எமது பிரச்சினைகளையும் அதற்கான தீர்வுகளையும் சற்று ஆழமாக ஆராய்வோம். இந்த முயற்சியில் நாம் எமது சக்திக்கு உட்பட்டு முடியுமானதை செய்வோம். இவற்றின் திருவினையாக்கம் எமது கைகளிலேயே தங்கி உள்ளது.

நாம் மக்கள் வெள்ளமாக அணி திரண்டு இந்த நாட்டின் ஏனைய மக்களுக்கும், நாட்டின் அதி உயர் தலைமைப்பீடத்திற்கும் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்வோம். உரத்துச் சொல்வோம். மறுக்கப்பட்டிருக்கும் எமது உரிமைகளுக்காகவும், மறந்து விடப்பட்டி ருக்கும் எமது மக்களின் பரிதாப நிலைமைக்காகவும் குரல் கொடுப்போம். இந்நாட்டின் பிறப்புரிமை பெற்றுள்ள நாம் வாழ்விட உரிமையுடனும், சமநிலை அந்தஸ்துடனும் அரசின் முழுவுரிமையும் கிடைக்கப்பெற்று வாழத்தகுதி பெற்றவர்களே என்பதை தெளிவுபடச் சொல்வோம். மறுக்கப்பட்டுள்ள உரிமைகளை வழங்கி மறு வாழ்வளிக்கச் சொல்வோம்.

எமது அடிப்படை உரிமைகளையும், அத்தியாவசியத் தேவைகளையும் பெற்றுக் கொள்ள எமது தாயகத்தை கொடுத்துவிட்டு வாழ, நிபந்தனைகளை விதிக்க, யாருக்குமே உரிமை கிடையாது என்பதை உறுதிபடச் சொல்வோம்.

நாட்டின் இனப்பிரச்சினைத் தீர்வில் வடமாகாண முஸ்லிம்களாகிய நாம் புறக்கணிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதை தெளிவுறச் சொல்வோம். எம்மைக் கருத்திற் கொள்ளாமல் ஏற்படுத்தப்படும் தீர்வு நிச்சயமாக நாட்டின் இனப்பிரச்சினைக்கு தீர்வாக, என்றுமே அமையாது என்பதை எமது எழுச்சியின் மூலம் உணர வைப்போம்.

*அல்லாஹ் எம்மை வழி நடத்துவானாக.*

> "நிச்சயமாக அல்லாஹ், எந்த ஒரு சமுதாயத்தினரையும், அவர்கள் தங்களைத் தாங்களே மாற்றிக் கொள்ளாதவரையில் அல்லாஹ்வும் அவர்களை மாற்றுவதில்லை"
>
> அல்குர் ஆன் 13 : 11

**ஒன்று படுவோம்! வெற்றி பெறுவோம்!!**

www.tamilarangam.net



# வடக்கு முஸ்லிம்கள் தமது வாக்குரிமையை எந்தத் தேர்தல் தொகுதிக்குப் பதிய வேண்டும்?

கலாநிதி. எஸ். எச். ஹஸ்புல்லாஹ்

ஒவ்வொரு வருடமும் ஜூன் 1 ஆந் திகதி முதல் வாக்காளர் இடாப்பு திருத்துவதற்கான கணக்கெடுப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படுவதுண்டு. 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க வாக்காளர்களைப் பதிவு செய்தல் சட்டத்தில் 12 (2) ஆம் பிரிவின் கீழ் வீட்டின் பிரதான குடியிருப்பாளர்கள் வாக்காளர் இடாப்பில் பெயர்களைப் பதிந்து கொள்வதற்கான வாக்காளர் விண்ணப்பப் பத்திரத்தைப் பூர்த்தி செய்து இதற்கென வரும் கணக்கெடுப்பாளரிடம் அல்லது கிராம சேவை அலுவலர்களிடம் கொடுக்க வேண்டும்.

1989க்குப் பின் வடக்கு முஸ்லிம்களின் வாக்குகள் எங்குமே பதிவு செய்யப்படாத நிலையிருந்தது, கடந்த வருடம் (1996) முதல் இடம் பெயர்ந்த வாக்காளர்களை அவர்களின் சொந்த மாவட்டங்களில் அல்லது இடம் பெயர்ந்து வந்து வதியும் புதிய மாவட்டத்தில் பதிவு செய்யுமாறு தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்கா பணிப்புரை வழங்கியுள்ளார்.

வடமாகாணத் தேர்தல் தொகுதிகளில் இதுவரை பதியப்பட்டிருந்த வடக்கு முஸ்லிம்களில் வாக்குரிமைத் தகுதி கொண்ட வாக்காளர்கள் எந்தத் தேர்தல் தொகுதியில் தம்மைப் பதிவு செய்து கொள்வது என்பது எமது மக்களிடையேயுள்ள ஒரு பெரும் வினாவாகும்.

வடக்கிலிருந்து பலவந்தமாக விரட்டப்பட்டு அகதி நிலையில் அல்லது அதற்கு சமமான அந்தஸ்தில் இன்றுவரை வாழ்ந்து வரும் இம் மக்கள் தத்தமது பூர்வீக தேர்தல தொகுதிகளில் பதியப்பட வேண்டும் என்று தேர்தல் ஆணையாளர் அறிவிப்பது அகதிகளின் நலன் நோக்கில் பொருத்தமானதாக இருக்கலாம். மாறாக தாம் விரும்பிய தேர்தல தொகுதியில் தமது பெயரைப் பதிவு செய்யும் சந்தர்ப்பமும் கொடுக்கப்பட்டுள்ளது. இது அகதி மக்கள் மத்தியில் ஒரு குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வம்சங்கள் தொடர்பான கருத்துக்களை சம்பந்தப்பட்டவர்களுடன் பகிர்ந்து கொள்வதை நோக்கமாகக் கொண்டு இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

## வடக்கு முஸ்லிம்களின் வாக்கு

வட மாகாணத்திலிருந்து 1990 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் வன்னி, யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதிகளைச் சேர்ந்தவர்களாகும். இம் மக்கள் இப்போது இலங்கையின் தென் மாகாணங்களில் வாழ்கின்றார்கள். இம் மக்களில் ஏறக்குறைய 60% மானவர்கள் புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த கற்பிட்டி, முந்தல், புத்தளம் பிரதேசங்களில் வாழ்கின்றார்கள். இம் மக்கள் இதுவரை எல்லா வகையான அரசியல் நடவடிக்கைகளிலும் வடமாகாண தேர்தல் தொகுதிகளைச் சேர்ந்தவர்களாகவே கருதப்பட்டு வந்திருக்கின்றனர். புதிய வாக்குப் பதிவு இதில் என்ன மாற்றத்தைக் கொண்டுவரப் போகின்றதென்பது இம் மக்களின் அரசியல் எதிர்காலத்தைப் பொறுத்தவரை முக்கியமானதாகக் காணப்படுகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## கடந்த காலத்தில் இம் மக்களின் வாக்குரிமை

இம் மக்களின் பலவந்த வெளியேற்றத்திற்குப் (1990 ஒக்டோபருக்கு) பின்பு பல தேசிய, பிரதேச, உள்ளூராட்சித் தேர்தல்கள் இந்நாட்டில் நடைபெற்றன. உதாரணமாக 1991 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றுகளுக்கான தேர்தலும், 1993 ஆம் ஆண்டு மாகாண சபைத் தேர்தலும், 1994 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாத பாராளுமன்றப் பொதுத் தேர்தலும், 1994 ஆம் ஆண்டு நவம்பர் மாத ஜனாதிபதிக்கான தேர்தலும் நடைபெற்றன.

மேற்குறித்த பல தேர்தல்களில் 1994 ஆம் ஆண்டின் ஒகஸ்ட் மாத பாராளுமன்றத் தேர்தலிலும், நவம்பர் மாத ஜனாதிபதித் தேர்தலிலும் வடக்கு முஸ்லிம்கள் தமது வாக்குகளை அளிப்பதற்கு சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டிருந்தார்கள். பாராளுமன்ற தேர்தலைப் பொறுத்த வரையில் வட மாகாணத்திற்கு வெளியே இடம் பெயர்ந்தவர்களாக வாழ்ந்த வடமாகாண தேர்தல் தொகுதியைச் சேர்ந்த வாக்காளருக்கு தமது சொந்தத் தேர்தல் தொகுதியில் வழங்கப்பட்ட சலுகைகளின் அடிப்படையில் வடக்கு முஸ்லிம்கள் தமது வடமாகாண தேர்தல் தொகுதிகளுக்கு கடந்த பொதுத் தேர்தலில் வாக்களித்தார்கள். ஆனால் துரதிர்ஷ்டவசமாக தமது பலவந்த வெளியேற்றத்திற்கு முந்திய 1989 ஆம் ஆண்டு வாக்குப் பதிவுகளின் அடிப்படையிலேயே இவ்வாக்குரிமை வழங்கப்பட்டது. இதனால் பல்லாயிரம் வாக்குரிமை வயதடைந்த முஸ்லிம் வாக்காளருக்கு வாக்குரிமை மறுக்கப் பட்டிருந்தது.

கடந்த பொதுத் தேர்தலில் வன்னித் தேர்தல் மாவட்டத்திலிருந்தும் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்திலிருந்தும் ஒவ்வொரு பிரதிநிதிகளை பாராளுமன்றத்திற்கு தேர்ந்தெடுத்துக் கொள்ளக் கூடிய வாய்ப்பு முஸ்லிம் வாக்காளர்களுக்கு காணப்பட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## கடந்த பொதுத் தேர்தலில் வடக்கு முஸ்லிம்களின் வாக்கு

1994 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதப் பொதுத் தேர்தலில் தமது வாக்குரிமையை அளிப்பதற்கு அகதி முஸ்லிம்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டமை ஒரு முக்கியமான அம்சமாகும். ஆனால் வாக்குரிமையை தமது சுய விருப்பத்திற்கேற்ப வழங்குவதில் பல பிரச்சினைகளை அப்போது இம் முஸ்லிம்கள் எதிர் நோக்கினார்கள். அதில் 1989 ஆம் ஆண்டிற்குப் பிறகு வாக்குரிமைத் தகுதி பெற்றவர்களுக்கு வாக்களிக்கும் சந்தர்ப்பம் கொடுக்கப்படாமை ஒருபுறமிருக்க, வாக்களிக்கத் தகுதி பெற்ற மொத்த முஸ்லிம் வாக்காளர்களில் 60% திற்கும் குறைவானவர்களுக்கே இத்தேர்தலில் வாக்களிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. இதற்கு பல காரணங்களைக் குறிப்பிடலாம்.

இப்பொதுத் தேர்தல் மிக அவசர அவசரமாக அறிவிக்கப்பட்டு நடாத்தப் பட்டது. வாக்காளர்களுக்கும், வேட்பாளர் களுக்கும் போதிய அவகாசம் கொடுக்கப் பட்டிருக்கவில்லை. இது குறிப்பாக முகாம்களில் வாழ்ந்த முஸ்லிம் அகதிகளை வெகுவாகப் பாதித்தது.

வடமாகாண தேர்தல் தொகுதிகளைச் சேர்ந்த முஸ்லிம் வாக்காளர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் சிதறி வாழ்ந்தமையால் தமது வாக்குகளை முறைப்படி வழங்க வாய்ப்பற்ற நிலை காணப்பட்டது. உதாரணமாக கொழும்பில் வாழ்ந்த பலரின் வாக்குகள் புத்தளத்தில் பதியப்பட்டிருந்தன. முகாம்களில் வாழ்ந்த வாக்காளருக்கான வாக்குச் சாவடிகள் பல முகாமிலிருந்து தொலை தூரத்தில் அமைந்திருந்தன. அகதிகளின் அடையாள அட்டைப் பிரச்சினையில் தேர்தல் அதிகாரிகள் கடுமை யாக இருந்தனர். பலவந்த வெளியேற்றத் தினால் அடையாள அட்டைகளை இழந்த பல முஸ்லிம் வாக்காளர்களுக்கு வாக்களிக்கும் சந்தர்ப்பம் இதனால் இழக்கப்பட்டது. இதுவும், இதுபோன்ற ஏனைய நடைமுறைப் பிரச்சினைகளும் வடக்கு முஸ்லிம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வாக்காளர்களில் குறிப்பிட்ட பகுதியினருக்கு வாக்கு அளிக்கும் சந்தர்ப்பத்தை இழக்கச் செய்தது. தமது வாக்குகள் பயனற்றுப் போனதைப் பற்றி இன்றும் இம்மக்களில் பலர் மனவருத்தப்பட்டவர்களாக காணப்படுகின்றனர்.

## தற்போதைய வாக்குப் பதிவு

18 வயதுக்குக் கூடிய எல்லா முஸ்லிம் ஆண், பெண்களும் தம்மை வாக்காளர்களாக பதிவு செய்து கொள்வதற்கு தகுதியுடைய வர்களாகும். இவர்கள் தாம் விரும்பிய தேர்தல் தொகுதிக்கு (உதாரணமாக வடக்கில் தாம் வாழ்ந்த தேர்தல் தொகுதிக்கோ அல்லது அகதிகளாக தாம் தற்போது வாழ்கின்ற தேர்தல் தொகுதிகளிலோ) தம்மை பதிவு செய்து கொள்ளலாம் என்று தேர்தல் ஆணையாளர் அறிவித்திருக்கிறார்.

## எந்த தேர்தல் தொகுதிக்கு வாக்குப்பதிவு

இச் சந்தர்ப்பத்தில் எந்த தேர்தல் தொகுதியில் முஸ்லிம் வாக்காளர்கள் தம்மை பதிவு செய்து கொள்ள வேண்டும் என்ற அம்சத்துடன் தொடர்புடைய சாதக, பாதக கருத்துக்களை இப்பொழுது நோக்குவோம்.

## பூர்வீகத் தேர்தல் தொகுதிக்கு வாக்குப் பதிவு

அகதி வாக்காளர்கள் தமது பூர்வீக தேர்தல் தொகுதிகளில் தம்மைப் பதிவு செய்து கொள்வதில் பின்வரும் சாதகத் தன்மைகள் காணப்படுகின்றன. அவை;

1. வடக்கில் தமதும் தமது எதிர்கால சந்ததியினரினதும் பிறப்பு, சொத்து அத்துடன் ஏனைய உரிமைகளை மேலும் உறுதிப்படுத்திக் கொள்ள இவ்வாக்குரிமை உதவும்.
2. வடக்கிற்கு மீளச் செல்வதற்கான வாய்ப்பினை இது கூட்டும்.
3. வடக்கிற்கான அரசியல் தீர்வொன்றில் பலவந்த வெளியேற்றத்திற்குட்பட்ட முஸ்லிம்களின் நலன்களும் கருத்தில் எடுத்துக் கொள்ளப்படுவதை இது வற்புறுத்தும்.
4. தற்போது நடைமுறைப்படுத்தப்படும் தருவாயில் காணப்படுகின்ற வடமாகாண புனரமைப்பில் முஸ்லிம்களின் சமூக, பொருளாதார, சமய நலன்களும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட இவ்வாக்குரிமை தூண்டும்.
5. அகதி முகாம் பகுதிகளில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற மீள்குடியேற்றத்தினால் உருவாகி வருகின்ற உள்ளூர் அகதிப் பிரச்சினைகளும், முஸ்லிம் – சிங்கள இனப் பிரச்சினைகளும் மேலும் வலுவடையாமல் இருப்பதற்கு அகதி முஸ்லிம்களின் வடமாகாணத்தினதான உரிமை உதவலாம்.
6. தாம் அகதிகளாக வாழ்கின்ற பிரதேசங்களில் தம்மை வாக்காளர்களாகப் பதிவு செய்து கொள்வது பலவந்தமாக வெளியேற்றப்பட்டவர்களின் அகதி அந்தஸ்த்தையும், அகதிகளின் நலனுக்காக அளிக்கப்பட்டு வருகின்ற உணவு, ஏனைய நிவாரணங்களையும் இடைநிறுத்தத் தூண்டலாம்.

## அகதிகளாக வாழும் பிரதேச தேர்தல் தொகுதிக்கு வாக்குப் பதிவு

வடக்கு முஸ்லிம்கள் தாம் தற்போது அகதிகளாக வாழுகின்ற பிரதேசங்களில் வாக்காளர்களாக தம்மைப் பதிவு செய்வதிலும் சில நன்மைகள் காணப்படுகின்றன. அவை,

1. தற்போது வாழுகின்ற பிரதேசங்களில் வாக்காளர் தகுதியைப் பெறுவதன் மூலமாக அகதி முஸ்லிம்கள் தொழில் வாய்ப்பு போன்ற நன்மைகளைப் பெறலாம்.
2. புத்தளம் மாவட்ட முஸ்லிம் வாக்காளர்களின் எண்ணிக்கை அகதி வாக்காளர்களின் எண்ணிக்கையால் குறிப்பிடத்தக்க அதிகரிப்பை அடையும். புத்தளம் தேர்தல் மாவட்டத்தில் முஸ்லிம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாராளுமன்ற அங்கத்துவம் ஒன்றை நிச்சயப்படுத்த இது உதவலாம்.

3. வடக்கில் மீண்டும் எப்போது மீள் குடியேறுவது என்பதில் அகதி முஸ்லிம்களுக்கு இன்னும் நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது. அந்த அடிப்படையில் இம்மக்களை தாம் அகதியாக வாழ்கின்ற பிரதேசங்களில் தற்காலிகமாகவாவது ஸ்திரப்படுத்திக் கொள்ள இவ் வாக்குப் பதிவு உதவக் கூடும்.

## வடக்கு முஸ்லீம்களின் அரசியல் எதிர்காலம்

வடக்கு முஸ்லீம் வாக்காளர்களுக்கு தாம் விரும்பிய தேர்தல் மாவட்டத்தில் தமது வாக்கை பதிந்து கொள்ளலாம் என்ற வாய்ப்பு பின்வரும் பிரதி விளைவுகளை ஏற்படுத்தலாம்.

இம் முஸ்லீம்களில் ஒரு குறிப்பிட்ட வீதத்தினர் வடக்கில் தமது பூர்வீக தேர்தல் தொகுதிகளில் வாக்காளர்களாகப் பதிந்து கொள்வர். ஏனையவர்கள் தமது குறுங்கால நலன் நோக்கில் தாம் அகதிகளாக வாழ்கின்ற தேர்தல் மாவட்டங்களில் தம்மை வாக்காளர்களாகப் பதிவு செய்து கொள்வர். இவ்வாறான ஒரு சூழ்நிலை ஏற்படும் கட்டத்தில் பின்வரும் வகையில் வடக்கு முஸ்லீம்களின் எதிர்கால அரசியலில் மாற்றங்கள் ஏற்படலாம்.

முதலில் வடக்கு முஸ்லீம்களின் இன்றைய ஏறக்குறைய 50,000 வாக்குப் பலம் வட மாகாண தேர்தல் தொகுதிகளுக்கும், தென்மாகாண தேர்தல் தொகுதிகளுக் குமிடையில் சிதறும் நிலை உருவாகும். குறிப்பாக வடக்கிற்கு வெளியே புத்தளம், அனுராதபுரம், குருணாகல், கொழும்பு ஆகிய தேர்தல் மாவட்டங்களில் வட மாகாண முஸ்லீம் அகதிகள் தமது வாக்கைப் பதிவு செய்து கொள்ளக்கூடிய வாய்ப்பு காணப் படுகின்றது.

இவ்வாறு வடக்கிற்கும், வடக்கிற்கு வெளியிலும் சிதறப் போகின்ற வடக்கு, முஸ்லீம்களுடைய வாக்குகள் வடக்கு முஸ்லீம்களின் தனித்துவமான பிரச்சினைகளான பலவந்த வெளியேற்றத்தினால் ஏற்பட்ட பிரச்சினைகளான அகதிப் பிரச்சினை, மீள் குடியேற்றப் பிரச்சினை, பொருத்தமான நஷ்டஈட்டைப் பெற்றுக் கொள்ளும் பிரச்சினை புனர்நிர்மாண, புனர் வாழ்வு பற்றிய பிரச்சினை ஆகியவற்றை பலவீனப்படுத்துவதோடு முக்கியம் இழக்கச் செய்யும். வடக்கு முஸ்லீம்கள் ஒத்த குரலில் தமது அகதிப் பிரச்சினைகளை ஓர் அரசியல் பிரச்சினையாக தேசிய மட்டத்திலும், சர்வதேச மட்டத்திலும் முன்வைக்கக் கூடிய வாய்ப்பை இதனால் இழப்பர் இது குறுங்காலத்திலும், நீண்ட காலத்திலும் இம் மக்களின் இலட்சியத்தையும், நலன்களையும் பாதிக்கும்.

வாக்குப் பதிவுக்குப் பின்னர் தாம் பதிந்து கொண்ட வடக்கிலும், வடக்கிற்கு - வெளியிலும் உள்ள தேர்தல் மாவட்டங்களில் அகதி முஸ்லீம்கள் மிக சொற்பத் தொகையினராக இருப்பர். அகதி முஸ்லீம் களுக்கென உள்ள தனித்துவமான பிரச்சினைகள் உள்ளூர் அரசியலில் மழுங்கடிக்கப்பட்டு மறைந்து விடக்கூடிய வாய்ப்பு காணப்படுகின்றது. அதே நேரத்தில் உள்ளூர் அரசியல், பொருளாதார, இன நலன்களுக்காக இவ் அகதி வாக்காளர்களின் வாக்குகள் பயன்படுத்தப்படக் கூடிய சூழல் ஏற்படும். உண்மையில் அகதி முஸ்லீம்களைப் பொறுத்தவரையில் அகதியாக்கப்பட்ட கடந்த ஆறு வருடகாலத்தில் ஏற்பட்டிராத பெரும் பாதிப்புகள் இப்புதிய வாக்குப் பதிவின் மூலமாக ஏற்படப் போகின்ற முடிவுகள் ஏற்படுத்தலாம்.

அத்துடன் இப்புதிய வாக்குப் பதிவின் மூலம் புத்தளம் மாவட்டத்தைத் தவிர வேறு எந்தத் தேர்தல் மாவட்டங்களிலும் எண்ணிக்கை ரீதியாக வாக்குப் பலம் கொண்டவர்களாக அகதி முஸ்லீம்கள் இருக்கமாட்டார்கள். புத்தளம் தேர்தல் மாவட்டத்திலும் கூட அகதி முஸ்லீம்களின் வாக்குப் பலம் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியும் விடாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தற்போது புத்தளம் மாவட்ட தேர்தல் தொகுதியில் மொத்த வாக்காளர்களில் ஏறக்குறைய 10% தினர் முஸ்லீம்களாக காணப் படுகின்றனர். புத்தளம் மாவட்டத்தில் வாழ்கின்ற முஸ்லீம் அகதிகளுள் பெரும்பான்மையினர் புத்தளம் மாவட்டத்தில் தம்மை வாக்காளர்களாக பதிந்து கொண்டாலும் கூட மாவட்ட மொத்த வாக்காளர்களில் முஸ்லீம்களின் வாக்குப் பலம் 15% திற்கு குறைவாகவே இருக்கும். இச் சந்தர்ப்பத்தில் ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, ஸ்ரீ லங்கா முஸ்லீம் காங்கிரஸ் கட்சி, அத்துடன் ஏனைய கட்சிகளும், சுயேட்சைக் குழுக்களும் முஸ்லிம் வாக்குகளை பங்காடக் கூடிய சூழ்நிலை காணப்படுகின்றது. இது புத்தளம் மாவட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தல்களில், மாகாண சபைத் தேர்தல்களில் முஸ்லீம் அங்கத்தவர்களைத் தெரிவதற்கு மேலதிக சக்தியாக காணப்பட்டாலும் பாராளுமன்றத் தேர்தலில் முஸ்லீம் அங்கத்துவம் ஒன்றிற்கு நூறு வீத நிச்சயத் தன்மையை ஏற்படுத்தாது.

அகதி முஸ்லீம்களின் கண்ணோட்டத்தில் உள்ளூராட்சியையும், மாகாண சபை அங்கத்துவத்தையும் விட பாராளுமன்ற அங்கத்துவம் தமது பிரச்சினையை தேசிய மயப்படுத்த உதவக் கூடியது. அந்தக் கண்ணோட்டத்தில் அரசியல் ரீதியாக அகதி வாக்காளர்களின் பங்களிப்பு பயனற்றதாக அமைகிறது. அகதி முஸ்லீம்களுக்கென்ற ஒரு பாராளுமன்ற அங்கத்துவத்தையும் கூட இழக்கும் சூழ்நிலை ஏற்படலாம்.

புத்தளம் முஸ்லீம்களைப் பொறுத்த வரையில் அகதி முஸ்லீம் வாக்காளர்களும் அவர்களது புத்தளம் மாவட்டத்திலான வாழ்வுரிமையும் இம் மாவட்டத்தில் இனப் பிரச்சினையை மேலும் தூண்டக் கூடியது. தேசிய கட்சிகளின் சிங்கள வாக்காளர்களின் உதவியின் மூலம் கடந்த காலங்களில் பாராளுமன்ற அங்கத்துவங்களைப் பெற்றுக் கொண்ட சந்தர்ப்பங்களில் வீழ்ச்சி ஏற்படக் கூடிய நிலை காணப்படுகின்றது.

புத்தளம் மாவட்ட தேர்தல் தொகுதி களில் அகதி முஸ்லீம்களின் தனித்துவமான பிரச்சினைகளும், நலன்களும் இதனால் கவனிப்பாரற்ற சூழ்நிலை ஏற்படுகின்ற அதே நேரத்தில் அகதி முஸ்லீம்கள் மாவட்ட அரசியலில் பகடைக் காய்களாக பயன்படுத்தக் கூடிய வாய்ப்புகளும் காணப்படுகின்றன.

இந்த அடிப்படையில் நோக்குகின்ற போது வாக்குப் பதிவு உரிமையின் மூலம் சிதறப் போகும் வடக்கு முஸ்லீம்களின் வாக்குப் பலம் இவ் அகதி முஸ்லீம்களின் பொது நலனுக்கு எதிராக குறுங்காலத்திலும், நீண்ட காலத்திலும் காணப்பட வாய்ப்பு உண்டு.

அதே நேரத்தில் வடமாகாணத்தில் இருக்கும் தமது பூர்வீக தேர்தல் தொகுதிகளில் தற்போதைக்கு தம்மை பதிவு செய்து கொள்வது இம் மக்களுக்கு பல வகையான நன்மைகளை தரக் கூடியதாக இருக்கும்.

முதலில், வட மாகாணத்தின் ஏறக்குறைய 50,000 முஸ்லீம் வாக்காளர் இருக்கிறார்கள். இது நிச்சயமாக வடக்கு முஸ்லீம்களுக்கு ஓர் அரசியல் பலமே. இவ் அரசியல் பலம் இச் சிறுபான்மையினர் பலவந்தமாக வெளி யேற்றப்பட்டவர்கள் என்ற அம்சத்தோடு இணைத்துப் பார்க்கின்ற போது மனிதாபிமான மட்டத்தில் மேலும் பல மடங்கு பலத்தினைப் பெறுகின்றது. சர்வதேச மட்டத்தில் இம் மக்களின் வாழ்வுரிமை, மீள் குடியேற்றம், புனர் வாழ்வு புனர் நிர்மாணம், நஷ்டஈடு, ஆகியவை மேலும் வலுவடையும். நிச்சயமாக வட மாகாணத்திற்கான எந்த ஒரு அரசியல் தீர்வும் அகதி முஸ்லீம்களின் பிரச்சினைக்கு தீர்வளிக்கப்படாத வகையில் முன்வைக்கப்பட முடியாது போய்விடும்.

அதிலும் குறிப்பாக வட மாகாணம் கிழக்கு மாகாணத்துடன் இணைந்தோ, அல்லது தனியாகவோ ஒரு அரசியல் அலகாக எதிர் காலத்தில் மாறப் போகின்றது என்பதில் யாருக்கும் சந்தேகமில்லை. அவ்வாறான சூழ் நிலையில் வடக்கில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ஏற்படப் போகும் அரசியல் அதிகாரப் பகிர்வு, புனர்வாழ்வு நடவடிக்கைகளில் இப் பிரதேசத்தின் பூர்வீகக் குடிகளான முஸ்லீம்களும் பங்காளிகளாக இருக்க வேண்டும் என்பதனை எல்லா அரசியல் சக்திகளும் ஆதரிக்கும். பலவந்த வெளியேற்றத்தினால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு பொருத்தமான நிவாரணம், புனர்வாழ்வு வடக்கு முஸ்லீம்களுக்கு கிடைக்கக்கூடிய வாய்ப்பும் காணப்படுகின்றது. வடமாகாண முஸ்லிம் தமிழர் மத்தியில் இன்று வரையில் நீடித்து நிலைத்திருக்கின்ற நட்பு நிச்சயமாக வடக்கு முஸ்லிம் அகதிகளின் நிரந்தர மீட்சிக்கு உதவும். அந்தக் கண்ணோட்டத்தில் வடக்கு முஸ்லிம்களின் வாக்கும், அவ்வாக்கு தமது பூர்வீக தேர்தல் மாவட்டங்களோடு இணைந்திருப்பதும் இம் மக்களுக்கு நிச்சயமாக ஒரு மாபெரும் பலமாக இருக்கும்.

வட மாகாணத்தில் முஸ்லீம்கள் சிறுபான்மையினர் தான். ஆனால் முதலாவதும், அத்தடன் முக்கியமானதுமான சிறுபான்மையாகும். அது மட்டுமன்றி வன்னி தேர்தல் தொகுதியில் ஒரு முஸ்லீம் பாராளுமன்ற அங்கத்தவரையும், ஏனைய மாகாண, பிரதேச, உள்ளூராட்சி தேர்தல்களில் தமது எண்ணிக்கைக் கேற்ப அங்கத்தவர்களை தெரிவு செய்யக் கூடிய வாக்குச் செறிவையும் கொண்டவர்களாக முஸ்லீம்கள் வடக்கில் காணப்படுகின்றார்கள்.

1994 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் இதற்கு சிறந்த சான்றாகும். இனப் பிரச்சினையைத் தமது தேர்தல் மாவட்டத்திற்கு வெளியே வாழும் வாக்காளர்களும் தமது சொந்த மாவட்டத்திற்கு வாக்களிக்கலாம் என்ற சலுகை இருந்ததனால் வடக்கு முஸ்லீம் வாக்காளர்கள் தமது வாக்கை வட மாகாண தேர்தல் தொகுதிகளுக்கு அளித்து தமக்குரிய பிரதிநிதித்துவத்தையும், அதற்கு மேலதிகமாகவும் பெற்றுக் கொண்டார்கள்.

***இன்று ஸ்ரீ லங்கா முஸ்லீம் காங்கிரஸ் வட மாகாண முஸ்லீம்களின் வாக்குகளினால் அளிக்கப்பட்ட இரண்டு பாராளுமன்ற அங்கத்தவர்களின் மூலமாக பாராளு மன்றத்தில் முக்கியமான ஒரு பலமாகவும் அரசாங்கத்தின் முக்கியமான பங்காளர்களாகவும் இருக்கின்றார்கள் என்பதை யாரும் மறந்து விடலாகாது. இந்தக் கண்ணோட்டத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லீம் காங்கிரஸ் வட மாகாண முஸ்லீம் வாக்காளர்களுக்கு என்றும் நன்றிக் கடன்பட்டவர்களாக இருக்கின்றார்கள் என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும். அதற்கு பிரதிக் கடன் வடக்கு முஸ்லிம்கள் எல்லா உரிமைகளோடும் தமது பூர்வீக இடங்களுக்கு மீளச் செல்வதற்கான எல்லா முன் ஆயத்தங்களையும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனது அரசியல் பலத்தின் மூலமாக செய்ய வேண்டும் என்று பலவந்த வெளியேற்றத்துக்குட்பட்ட வட மாகாண முஸ்லீம்கள் எதிர்பார்ப்பதில் நியாயம் இருக்கிறது.***

அது போல வடக்கு முஸ்லீம்களின் நலனில், எதிர்காலத்தில் அக்கறை கொண்டுள்ள கட்சிகளும், அமைப்புக்களும், தனிப்பட்டவர்களும் வடக்கு முஸ்லிம்களின் நியாயமான உரிமைகளை, அபிலாசைகளை வென்றெடுத்துத் தர உதவுவார்கள் என்பதில் ஐயமில்லை. இந்தக் கண்ணோட்டத்தில் வடக்கு முஸ்லிம் அகதிகளின் நலன்களில் அக்கறை கொண்டவர்களுக்கு தற்போது இருக்கின்ற உடனடிக் கடமை இம் மக்களின் வாக்குப் பதிவை பூரணமாகவும், அதே நேரத்தில் வட மாகாண தேர்தல் தொகுதிகளுக்கு பதிவு செய்வதற்கு பொருத்தமான உதவிகளையும் செய்வதாகும். வடக்கு முஸ்லிம்கள் அரசியல் அகதிகளாக, அரசியல் அநாதைகளாக மாற்றப்படமாட்டார்கள் என்ற நம்பிக்கையில் வடக்கு முஸ்லீம்கள் இவ் உதவியை எதிர்பார்க்கின்றார்கள். ■

*நீ போட்ட*
*இட்டுப் பிச்சையில்*
*ஆட்சிக்கு வந்தவர்கள்*
*நீ ஏந்தும்*
*பாத்திரத்தை*
*திரும்பிப்*
*பார்ப்பார்களா..?*

www.tamilarangam.net



# என்.எம்.ஆர்.ஓ.விடம் தமிழ் போராளிகளும் முஸ்லிம் காங்கிரஸும் கற்றுக்கொள்ள அதிகம் உள்ளது

**அகதி இதழ் 9ல் வெளியான வ.ஐ.ச. ஜெயபாலனின் பேட்டியின் தொடர்...**

**கேள்வி: தமிழ் முஸ்லிம் உறவு முறையில் ஏற்பட்ட இடைவெளிக்கு பின்னணிக் காரணங்கள் எதுவாக இருக்க முடியும்?**

**பதில்:** 1960களிலும் ஏன் 70 களிலும் கூட வடகிழக்கில் தமிழ் முஸ்லிம் உறவுகள் ஒரு அமைப்பு ரீதியான இன சமத்துவத்திலிருந்து உருவானதல்ல. பாரம்பரியமான சக வாழ்வின் தொடர்ச்சியாகவும், ஒரு பொதுவான பாரம்பரிய பிரதேசத்தை பகிர்ந்து கொண்டிருப்பதன் அடிப்படையிலும் மேற்படி பாரம்பரிய பிரதேசமும் அங்கு வாழ்ந்த தமிழ் முஸ்லிம் மக்களும் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களிலும் பாதிக்கப்பட்ட அடிப்படையிலும் தான் தோற்றம் பெற்றது. இது பாதுகாப்புத் திருமணமாகவே தொடர்ந்தது. ஒருபோதும் பரஸ்பரம் புரிந்துணர்வும் சமத்துவமும் உள்ள காதல் திருமணமாக இது இருக்க வில்லை. கடந்த காலங்களில் வடகிழக்கு முஸ்லிம்கள் தென்னிலங்கை முஸ்லிம் தலைவர்களது அரசியலுடன் தமது அரசியலை சிக்கல்படுத்திக் கொண்டமைக்கு மிகவும் கடுமையான விலையைக் கொடுத்திருக்கிறார்கள். உண்மையில் அவர்கள்தாம் பெருமளவில் பாரம்பரிய நிலத்தைப் பறி கொடுத்தவர்கள். ஆனால் தமிழர்கள் தொடர்ந்தும் போராடி வந்தனர். இதற்கு அவர்கள் 1949களிலேயே கொழும்பு தமிழர்களது சந்தர்ப்பவாத அரசியலில் இருந்து விடுபட்டு வடகிழக்கு மாகாணத்தை தமது அடிப்படைப் பிரதேசமாக வரித்துக் கொண்டு அதனைப் பாதுகாக்கிறதை தமது பிரதான இலட்சியமாகக் கொண்டனர். 1986களில் மு.கா. எழுச்சியுடன் வடகிழக்கு முஸ்லிம்களும் இத்தகைய ஒரு நிலைப்பாட்டையே எடுத்தனர். இன்று பொதுவாக இலங்கை முஸ்லிம்கள் பற்றிய பெரும்பாலான அரசியல் விவாதத்தில் வடகிழக்கு முஸ்லிம்கள் தனிப் பிரிவினராகவே அடையாளப் படுத்தப்படுகின்றனர். எனினும் 1986 களில் வடகிழக்கு முஸ்லிம்கள் மத்தியில் இம்மாற்றங்கள் உருவானபோது தமிழர்களது போராட்டம் ஆயுதப் போராட்டமாகத் தீவிரப்பட்டிருந்தது.

மேற்படி போராட்ட தலைமைகளினால் கூட முஸ்லிம் மக்களையும் 1980களில் அவர்கள் மத்தியில் உருவாகி பரந்துபடுகிற மாற்றங்களையும் புரிந்து கொள்கிற அறிவாற்றல் இருந்ததில்லை. அவர்களுடைய நிலைப்பாடு தமிழ் நிலைப்பாடாகவே இருந்தது. தமிழ் பேதம் மக்களின் நிலைப்பாடாக விரிவடைய வில்லை. நான் இந்த ஆபத்தை உணர்ந்ததும் "தேசிய இனப்பிரச்சினையும் முஸ்லிம் மக்களும்" என்ற புத்தகத்தை எழுத ஒரு காரணமாக இருந்தது.

**பேட்டி - அபூ பாதிமா**

1980களில் புதிய நிலைமைகளை தமிழ் அரசியல் போராட்ட தலைமைகள் உள்வாங்கியிருந்தால் நிலமை மாறியிருக்கும். உண்மையாகவே முஸ்லிம் காங்கிரசாரும் திரு அஷ்ரப் அவர்களும் வடகிழக்கு மாகாணத்து தமிழ் பேசும் மக்களது விடுதலைப் போராட்டத்தின் ஒரு மூலைக் கல்களாகியிருப்பார்கள்.

திரு.அஷ்ரப் அவர்கள் திரு எம்.எஸ்.காரியப்பரின் தவறான பாதைக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தள்ளப்பட்டதுக்கு தமிழ்களும் தென்னிலங்கை முஸ்லிம் மேல் வர்க்கத்தினரும் காரணம் . காரியப்பரால் ஆகாத காரியமில்லை என்று ஒரு காலத்தில் வடகிழக்கில் முஸ்லிம் மக்கள் நம்பி ஏமாந்தார்கள்.

அந்த வரலாறு வடகிழக்கு முஸ்லிம் மக்கள் வாழ்வில் மீண்டும் உருவாகிற தற்கான அடிப்படைகளை காரியப்பரால் 'ஆகாத காரியமில்லை' என்கிற போதை வஸ்துவை மீண்டும் மீண்டும் தாங்கள் விழுங்குவதற்கான காரணங்களை வடகிழக்கு முஸ்லிம் மக்களும் ஆராய்ந்து கண்டறிந்து அவற்றைக் களைந்திட அரசியல் ரீதியாக உழைக்க வேண்டும்.

தமிழ் போராளிகள் தரப்பு நிபந்தனையற்ற விதத்தில் முஸ்லிம் தலைமைகளுடன் பேச்சு வார்த்தையை ஆரம்பிக்க வேண்டும்.

***கேள்வி: வடபகுதி முஸ்லிம்கள் 1990 அக்டோபரில் விடுதலைப் புலிகளால் வெளியேற்றப்பட்டதையிட்டு என்ன கூற விரும்புகிறீர்கள்?***

**பதில்:** நோர்வேயில் இருந்து முதல் முறையாக 1990களில் நான் இலங்கைக்கு திரும்பி வந்திருந்தேன். குறிப்பிட்ட சம்பவங்கள் இடம்பெற முந்திய காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பான ஆய்வுகளில் கிழக்கு மாகாணத் தில் ஈடுபட்டிருந்தேன். அக்காலகட்டத்தில் கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் உறவுகளை விட பிரிவுகள் அதிகரித்து செல்கிறதை நான் அவதானித்தேன். 1987ல் சென்னையில் விடுதலைப் புலிகளுக்கும் கலாநிதி பதியுதீன் முகமது அவர்கள் தலைமையில் முஸ்லிம்கள் ஐக்கிய விடுதலை முன்னணியினருக்கும் இடையில் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டிருந்தது. அது தமிழ் முஸ்லிம் மக்களது உறவுகளுக்கான ஒரு அடிப்படையான சாசனமாகும். அதற்கு முரணான வகையில் தமிழ் போராளிகள் அரசியல் நடத்தி வருகிறதை கண்டு நான் அதிர்ச்சி அடைந்திருந்தேன். 1987ன் சென்னை ஒப்பந்தத்தில் தமிழ் போராளிகள் தலைமை முஸ்லிம் மக்களை தனி இனத்தவர்கள் என்பதை ஏற்றுக் கொண்டிருந்தது. அதன் அடிப்படையில் முஸ்லிம் மக்களே தமது தலைவர்களை தெரிவு செய்கிற உரிமையுள்ளவர்கள். நாம் விரும்பினால் என்ன விரும்பாவிட்டால் என்ன முஸ்லிம் மக்கள் ஏற்றுக் கொள்கிற தலைவர்களை அங்கிகரித்து அவர்களுடன் பிரச்சினைகள் பற்றி பேச வேண்டியவர்கள் இதை விடுத்து தாம் விரும்புகிறவர்களை முஸ்லிம் மக்களது தலைவர்களாக நியமிக்க விரும்புகிற போக்கே அன்று சகல தமிழ் போராளிகள்/ அரசியல் தலைமைகள் மட்டத்தில் இருந்தது. ஒரு புறத்தில் சிங்கள பேரினவாதிகள் நடத்தும் குமாரசூரியர், தேவநாயகம், ராஜன், கதிர்காமர் அரசியலை நிராகரித்துக் கொண்டு மறுபுறத்தில் முஸ்லிம் மக்களிடம் அதே வகை அரசியலை நடத்தவே தமிழர்கள் தலைமை இன்றும் விரும்புகிறது. இந்தப் போக்கே சம்பவங்களின் முன்பு 1990 களிலும் கிழக்கு மாகாணத்தில் காணப் பட்டது. சில முஸ்லிம் இளைஞர்களை தமது போராளிகள் அமைப்பில் இணைத்துக் கொள்வதன் மூலம் முஸ்லிம் மக்கள் மீது தமது ஆதிக்கத்தை விஸ்தரிக்கவே தமிழ் போராளிகள் முயன்றனர். சகல தமிழ் தலைமைகளுக்கும் இந்த குற்றச்சாட்டு பொருந்தும் இதனால் முஸ்லிம் இளைஞர்களின் ஒரு பகுதியினர் விரக்தியடைந்து இருந்தனர். சிங்கள பேரினவாத அரசின் படைகளின் ஆதிக்கத்தை மீண்டும் கொண்டு வருவதுதான் தமிழ் போராளிகளின் ஆதிக்கத்துக்கு மருந்து என்று அவர்களில் சிலர் தீவிரமாக கருதினார்கள். இத்தகைய இளைஞர்கள் சிலரோடும் 1990ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் நான் அளவாளாவியிருக்கிறேன். இந்த முரண்பாடு இப்படித்தான் தீவிரப்பட்டது. அடிப்படையில் வடகிழக்கு மாகாணத்தின் பெரும் பான்மையினர் என்ற வகையிலும் முஸ்லிம்களை தமது பின்னிணைப்பாக நடத்த மட்டுமே தயாராக இருந்தவர்கள் என்ற வகையிலும் சகல



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போட்டிக் குழுக்களது தலைமைகள் உட்பட தமிழர்கள் தலைமையே முதன்மையான பொறுப்பை ஏற்றுக் கொண்டு முதலில் சுய விமர்சனத்துக்கும் செம்மைப்படுத்தலுக்கும் முன்வர வேண்டும்.

***கேள்வி: அதிகார பரவலாக்கல் யோசனைகள், எவ்வாறாக அமைவதன் மூலம் வட கிழக்கு முஸ்லிம்களது உறவு நீடிக்கக் கூடிய, சகல தரப்பு மக்களது உரிமைகளும், நலன்களும் பேணக் கூடிய வகையில் அதிகம் சாத்தியப்படும்?***

**பதில்:** இந்த அரசின் தீர்வு முயற்சிகள் தொடர்பாக எனக்கு நிறைய விமர்சனங்களும் சந்தேகங்களும் உள்ளது. அவர்கள் இன்று சமாதான முயற்சிகளை யுத்தத்தை நியாயப் படுத்துகிற ஒரு கருவியாகவே உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பயன்படுத்துகிறார்கள் என்று தோன்றுகிறது. எனினும் நமது அளவளாவலின் பொருள் அதுவல்ல. எனினும் இன்று தீர்வு திட்டம் பற்றி ஒரு விவாதம் தீவிரப்பட்டுள்ளது. நவசமாசமாஜ கட்சியினர் தவிர எந்த அரசியல் கட்சிகளும் இது முதலாவதாக வடகிழக்கு மாகாணத்து தமிழ்/ முஸ்லிம் மக்களது சுயநிர்ணய உரிமை தொடர்பான பிரச்சினை என்பதையும் அதற்கு அடுத்ததாக மட்டுமே இலங்கையடங்கிலும் பிரதேசங்கள் ரீதியான அதிகார பரவலாக்கல் பிரச்சினை எழுகிறது என்பதை ஏற்றுக் கொள்ள வேறு சிங்கள கட்சிகள் தயாராக இல்லை.

வடகிழக்கு பிரச்சினை தொடர்பாக தமிழ் முஸ்லிம் மக்களிடையே தலைமைத்து வத்தின் இணக்கப்பாடு ஏற்பட வேண்டும். இது அடிப்படையில் முன்னணி தமிழ் போராளிகள் அமைப்பும் முன்னணி வடகிழக்கு முஸ்லிம் தலைமைத்துவமும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் அங்கீகரித்து பேச முன்வருவதன் மூலம் மட்டுமே சாத்தியப்படும்.

> விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் வடகிழக்கு முஸ்லிம் மக்களது தலைமைத்துவமாக முஸ்லிம் காங்கிரசும், வடக்கு முஸ்லிம் உரிமைக்கான அமைப்பும் (என்.எம்.ஆர்.ஓ) இயங்குவதை விடுதலை புலிகளும், தமிழ் மக்களது அரசியலை நிர்ணயிக்கிற முன்னணி அமைப்பாக விடுதலை புலிகள் இருப்பதை முஸ்லிம் காங்கிரசும், என்.எம்.ஆர்.ஓவும் ஏற்றுக் கொண்டே யாக வேண்டும். தமிழ் மக்களதும் முஸ்லிம்களதும் விடுதலை போராட்டத்தை ஒருவரை ஒருவர் அழிக்கிற போராட்டமாக திசை திருப்பி விடுகிறதை இரண்டு பகுதியினரும் கைவிட வேண்டும். இந்த விடயத்தில் என்.எம்.ஆர்.ஓ. விடமிருந்து தமிழ் போராளிகளும், மு.காங்கிரசும் கற்றுக் கொள்ள அதிகம் உள்ளது என்றே நான் கருதுகின்றேன். என்.எம்.ஆர்.ஓ விடுதலைப் புலிகள், அரசு என்றிருக்கிற போராட்ட அரசியல் அரங்கில் வடபகுதி முஸ்லிம் மக்களை எந்தவொரு தரப்பினரினதும் வாலாக இல்லாமல் ஒரு தரப்பினராக உயர்த்துகிற முயற்சியில் என்.எம்.ஆர்.ஓ வெற்றி பெற்று வருகிறது. ஆனால் விடுதலை புலிகளும் முஸ்லிம் காங்கிரசும் தமிழர்களதும் முஸ்லிம்களதும் தலைமைத்துவம் தொடர்பான யதார்த்தத்தை இன்னமும் உணர்ந்து ஏற்றுக் கொள்ளவில்லை.

இதனால் திரு. அஷ்ரப் அவர்களின் நடவடிக்கைகள் சில கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களை சிங்கள அரசின் பின் இணைப்பாக்கி விடுகிற ஆபத்தான போக்கைக் கொண்டிருக்கிறது. குறிப்பாக ரிவிரெச நடவடிக்கைகளுடன் ஆரம்பிக்கிற கால கட்டத்திலிருந்து அவர் ஒரு போர் தளபதிபோல பேசி வருகிறார். தமிழர்கள் ஒன்றில் எம்மோடு நிற்க வேண்டும் அல்லது புலிகளோடு நிற்க வேண்டும் என்று கூட அவர் பேசியிருக்கிறார். அவர் சிங்கள ஆதிக்க அமைப்பின் தளபதியாக அல்ல முஸ்லிம் மக்களது தளபதியாகவே இருக்க வேண்டும்.

***கேள்வி: தற்போது SLMC இணைந்த வடகிழக்கில் முஸ்லிம் அலகு அல்லது தென்கிழக்கு மாகாணசபை என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளது. இதன் சாதகபாதகங்கள் எவ்வாறு அமையும்?***

**பதில்:** எனது கருத்துப்படி முஸ்லிம் தலைமைகள் இரண்டு கோரிக்கைகளை ஒன்றுக்கு ஒன்று மாற்று திட்டமாக முன்வைக்கலாம். ஒன்று இணைந்த வடகிழக்கு மாகாணத்தில் தமிழ் முஸ்லிம் மக்களது சமத்துவத்தையும் இன கலாசார தனித்துவத்தையும் உறுதிப்படுத்துகிற வகையில் சகல அதிகாரங்களையும் நிலம் நீர், கடல் வளங்களையும் பகிருகிற ஒரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தீர்வுத் திட்டத்தை முன்வைக்கலாம். இத்திட்டம் வடகிழக்கு மாகாணத்தில் வாழ்கிற சிங்கள மக்களது சகல உரிமை களையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்து கிறதாக இருக்கும். இத்தகைய ஒரு திட்டம் மட்டுமே திட்டமிட்ட சிங்கள குடியேற்றத் திட்டங்களில் அபகரிக்கப்பட்ட தமிழ் முஸ்லிம் மக்களது வளங்கள் நிரந்தரமாக துண்டிக்கப்படாமல் பாதுகாக்கும்.

அடுத்தது வடகிழக்கு மாகாண முஸ்லிம் அலகுகளை உள்ளடக்கிய தென்கிழக்கு மாகாணசபை. இத்தீர்வுத் திட்டத்தில் அம்பாறை மாவட்ட தமிழர்களை யும் இணைப்பது சாத்தியமாக இருக்கும் என்று நான் கருதவில்லை. ஏனென்றால் கிழக்கு மாகாணத்தின் கடந்த பத்து இருபது வருட வரலாற்றை எடுத்து ஆராய்ந்தால் இக்காலத்தில் இங்கு இடம் பெற்ற பெரும்பாலான தமிழ் முஸ்லிம் மோதல்களும் ஏதோ ஒரு விதத்தில் அம்பாறை மாவட்ட தமிழர்களோடு சம்பந்தப்பட்டதாகவே அமைகிறது. பெரும்பாலும் இதுவே பின்னர் வேறு பகுதிகளுக்கு பரவியிருக்கிறது. 1990 ஆண்டு மோதல்களில்கூட இந்த பண்புகளைக் காணலாம். உதாரணத்துக்கு தமிழ் தேசிய இராணுவமும் (TNA) விடுதலைப் புலிகளும் சரணடைந்த முஸ்லிம் பொலிசாரை கொலை செய்தமை, ஒரு முஸ்லிம் சிறு குழுவினர் தமிழர்களை கடத்திக் கொள்வதில் அரச படைக்கு துணைபோனது என்பவற்றைக் குறிப்பிடலாம். இத்தைகய ஒரு சூழ்நிலையில் தீர்வுத் திட்டத்தில் இணைக்கப்படுவதை அம்பாறை மாவட்ட தமிழ்மக்களும் ஏற்கவில்லை. இதை விட அம்பாறை மாவட்ட தமிழர்கள் பிரதேசங்கள் சார்ந்த காட்டுப் பகுதிகளில் குறிப்பாக களவாஞ்சிகுடி ஆற்றுப் பகுதியில் தமிழ் போராளிகள் பலமாக இருக்கிறார்கள். எனவே அம்பாறை மாவட்ட தமிழ் பகுதிகளையும் இணைத்த முஸ்லிம் அலகு வெடிகுண்டை வயிற்றில் கட்டிக் கொண்டிருக்கும் முஸ்லிம் அலகாகும். எனவே முஸ்லிம் அலகு என்கிற போது அம்பாறை மாவட்ட தமிழர்கள் புற நீங்கலான முஸ்லிம் அலகுக்கு சமத்துவமும் இனத்துவமும் உறுதிப்படுத்தப்பட்ட இணைந்த வடகிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்களுக்கு உரித்தும், தெரிவும் உள்ளது. எனது தெரிவு இணைந்த அலகாகும். தனித்த முஸ்லிம் அலகு பற்றிய கோரிக்கை முஸ்லிம் மக்களது உரிமைகளை உயர்ந்த பட்சம் உறுதிப்படுத்து கிறதற்கான உபாயமாக இருந்தால் நன்மை பயப்பதாக அமையும். முஸ்லிம் தனி அலகின் தாற்பரியத்தை காத்தான்குடி குடி தண்ணீர்ப் பிரச்சினையையும் அதன் தீர்வுக்கான வாய்ப்புகளும் பற்றிய ஆய்வு துலாம்பரமாக்கும். இன்றைய காத்தான்குடி யின் மாபெரும் நெருக்கடியாக தண்ணீர் பிரச்சினையை சுட்டலாம். தமிழ் கிராமமான ஆரையம்பதியில் இருந்து தண்ணீர் எடுக்க தமிழர்களது எதிர்ப்புள்ளது. மாற்று வழி உன்னிச்சையில் இருந்து தண்ணீர் பெறுவதா கும். இரண்டு பகுதிகளுமே முஸ்லிம் அலகுக்குள் வருகிற சாத்தியம் இல்லை. காத்தான்குடி தண்ணீர் நெருக்கடிக்கு தற்காலிக ஏற்பாடாக ஆரையம்பதியில் இருந்து தண்ணீர் வழங்க தமிழர்கள் முன்வர வேண்டும். நீண்டகால ஏற்பாடாக உன்னிச் சையில் இருந்து தண்ணீர் பெறுவதற்கான திட்டம் உடனடியாக உருவாக்கப்பட வேண் டும். காத்தான்குடியின் நிலையில்தான் வட கிழக்கு மாகாணத்தில் பல முஸ்லிம் பகுதி கள் உள்ளன. மறுபுறத்தில் முஸ்லிம்களின் சம்மதமின்றி தமிழர்கள் கிழக்கிலங்கையில் புவியியல் தொடர்பை பராமரிப்பது சிரமம். எனினும் முஸ்லிம் மக்கள் தமக்கு தனி அலகுதான் வேண்டும் என்று கோரினால் அதை மறுக்க எந்த தமிழருக்கும் உரிமையில்லை.

இந்த சமயத்தில் வேறு ஒன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். வடபகுதி முஸ்லிம் களுக்கு தாம் தவறிழைத்து விட்டதாக விடுதலைப் புலிகளின் தலைவர்கூட தெரிவித் திருந்தார். அவர்களது கூற்று உண்மையானது என்றால், உண்மையிலேயே அவர்கள் தமிழ் முஸ்லிம் மக்களது நல்லுறவை விரும்புகிற வர்களானால் உடனடியாகவே திரும்பிச் சென்றுள்ள, செல்கின்ற மக்களை வரவேற்ப துடன் அவர்களது பாதுகாப்புக்கு உத்தர வாதம் தர வேண்டும். தவறுகளை திருத்துவதன் முதல் நடவடிக்கையாக அவர்கள் முஸ்லிம் மக்களை திரும்பி வருமாறு அழைக்க வேண்டும். அதற்கான தருணம் இதுதான். ■

ஒன்று படுவோம்! வெற்றி பெறுவோம்!!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# செய்திச் சிதறல்கள்

## மக்கள் முறைப்பாட்டு மன்றம்

26,27,10-96ல் புத்தளம் மாவட்டத்தில் உள்ள கற்பிட்டி, பள்ளிவாசல்துறை, கொய்யாவாடி, கரம்பை, மதுரங்குளி ஆகிய இடங்களிலுள்ள வடக்கு முஸ்லிம்கள் வாழும் பகுதிகளில் மக்கள் முறைப்பாட்டு மன்றங்களை NMRO ஏற்பாடு செய்தது.

இம்மன்றங்களில் கலந்து கொண்ட பெரும்திரளான மக்கள் அகதி வாழ்க்கையோடு தொடர்புள்ள பிரச்சினைகள், தற்பொழுது அகதியாக வாழும் இடங்களில் சொந்தக் காணியில் குடியேறுவ தோடுள்ள பிரச்சினைகள், வடக்கில் மீளக்குடியேறுவதோடுள்ள பிரச்சினைகள் என பலதரப்பட்ட பிரச்சினைகள் பற்றி பல கருத்துக்களை முன் வைத்தனர்.

அவற்றுள் ஐந்து விடயங்கள் முக்கியமானதாகக் கொள்ளப்பட்டு ஜனாதிபதிக்கும், ஐ.நா. இலங்கைப் பிரதிநிதிக்கும், சர்வதேச தொண்டர் ஸ்தாபனங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. அவைகளாவன.

1. வடக்கு முஸ்லிம்கள் தமது தாயக மண்ணுக்கு எவ்வாறாயினும் மீளச்செல்ல வேண்டும் என்ற உறுதியான குறிக்கோளுடனேயே இருக்கின்றனர். முகாம் வாழ்க்கையில் அவர்களுக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவங்களினால், எவ்வகையான அர்ப்பணங்களுடனாவது மீண்டும் தமது தாயகத்துக்குச் செல்லவே விருப்பமுடையவர்களாகக் காணப்படுகின்றனர்.
2. ஆனாலும் அது வரையில் தங்களது **'அகதி அந்தஸ்து'** தேசிய சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்றும் அது வரையில் உணவு நிவாரணங்கள் தொடர்ச்சியாக வழங்கப் படுவதுடன், தற்காலிக வாழ்விட வசதிகள், பாடசாலைகள், நீர், மலசல கூடம் மேலும் அதிகரிக்கப்பட வேண்டும்.
3. மேலும் அண்மையில் புத்தளத்தில் புனர்வாழ்வு அமைச்சரால் திறந்து வைக்கப்பட்ட குடியேற்றம் அகதிகளுக்கான வாழ்விடப் பிரச்சினைகளுக்கான **இடைக்காலத் தீர்வுதான்** என்பதை தெட்டத் தெளிவாக அகதிகளுக்கும், தேசிய சர்வதேசத்துக்கும் அரசு பகிரங்கமாக அறிவிக்க வேண்டும்.
4. இன்னும் அண்மையில் புத்தளத்தில் புனர்வாழ்வு அமைச்சரால் திறந்து வைக்கப்பட்ட குடியிருப்பு வசதிகள் இதுவரையில் இவ்வசதிகள் கிடைக்காத ஏனைய 90% எமது மக்களுக்கும் அது (புத்தளத்திலும் ஏனைய பிரதேசங்களிலும் வாழும்) அளிக்கப்பட வேண்டும்.
5. அத்துடன், தம் தாயகத்துக்கு திரும்பிச் செல்லல் என்ற அடிப்படைப் பிரச்சினைக்கு அரசும் ஏனைய சமாதான சக்திகளும் உரிய நடவடிக்கையை எடுப்பதோடு இனப்பிரச்சினை பேச்சுவார்த்தைகளிலும், சமாதானத் தீர்வுக் கூட்டங்களிலும் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட தமது பிரச்சினை எடுக்கப்பட்டு பொருத்தமான தீர்வு காணப்பட வேண்டும்.

## NMRO வின் செயல் திட்டங்கள் பற்றிய விளக்கக் கூட்டம்

20.12.96ல் புத்தளம் மன்னார் வீதியில் சோல்டன் முகாம் 2ல் அமைந்துள்ள பாலர் பாடசாலையில் NMRO வின் செயல் திட்டங்கள் பற்றிய விளக்கக் கூட்டம் கிராம அதிகாரி ஏ.எஸ்.ஹாஜா மஹ்தூம் தலைமையில் இடம் பெற்றது. இக் கூட்டத்தில் புத்தளம் பிரதேச



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செயலகத்துக்குட்பட்ட வடக்கைச் சேர்ந்த முஸ்லிம்கள் பலர் கலந்து கொண்டனர். NMRO வின் நடவடிக்கைகள், எதிர்காலத் திட்டங்கள் பற்றி அமைப்பின் உப தலைவர் மௌலவி பி.ஏ.எஸ்.சுப்யான் பல ஆதாரங்களுடன் எடுத்துரைத்தார்.

அவர் தனதுரையில் எமது அமைப்பு ஆரம்பிக்கப்பட்டு நான்கு வருடங்கள் கடந்து விட்டன. இந்தக் கால எல்லைக்குள் நாம் பலவித நன்மையான காரியங்களை எமது மக்களின் உரிமைகளை வென்றெடுப் பதற்காகச் செயல்படுத்தியுள்ளோம்.

நாடு விட்டு நாடு சென்றால்தான் அகதி அந்தஸ்து வழங்கப்பட்டு அவர்களுக்குத் தேவையான வசதிகள் யாவும் செய்து கொடுக்கப்படுகின்றன. ஆனால் சொந்த நாட்டுக்குள்ளே அனைத்து உடைமை களையும் இழந்து, இருக்க இடமின்றி, உண்ண உணவின்றி, அலைந்து திரிந்த எமக்கு அகதி அந்தஸ்து தருவதற்கு ஐ.நா.சபை மறுத்து விட்டது. தொடர்ச்சியாக நாம் எழுப்பிவரும் குரல்களாலும், போராட்டங் களினாலும், இன்று எம்முடைய பிரச்சினை தனித்துவமாக நோக்கப்பட்டு, பிரத்தியேக மான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகிறது. இது சலுகை அல்ல. எமது உரிமையாகும்.

எமது உரிமைகளை வென்றெடுக்க நாம் நடத்தும் போராட்டங்கள் மூலம் கிடைக்கும் வெற்றிகள் மக்களின் நல்வாழ்வுக்கேயாகும். எமக்குத் தேவை எமது உரிமைகள். சலுகைகளை நாம் எதிர்பார்க்கவில்லை. அகதிகளுக்காக செயல்படும் பெரும்பாலான அமைப்புக்கள் சலுகைகளையும் உதவிகளை யும் மட்டுமே வேண்டி நிற்கின்றன. ஆனால் நாம் இதற்கு முற்றிலும் மாறுபட்டவர்களாக எமது உரிமைகளையே வேண்டி நிற்கின்றோம்.

உரிமைகளை நாம் கோராமல் இருந்திருந் தால் மேலும் மேலும் எமது சமூகம் சுரண்டப்படும் அபாயம் ஏற்பட்டிருக்கும். எனினும் எமது அமைப்பு தோற்று விக்கப்பட்டதன் மூலம் அது நிறுத்தப் பட்டுள்ளது.

எமது தாயகம் வடக்கேயாகும். எமது பூர்வீக தாயகத்திற்கு நாம் திரும்பச் சென்றே ஆக வேண்டும். எமது பாரம்பரிய பூமியிலிருந்து பலவந்தமான முறையில் சில மணி நேரகால அவகாசத்துக்குள் வெளியேற்றப்பட்ட நாம் தெற்கிலே தற்காலிகமாகவே வாழ்கின்றோம்.

ஆனால் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சினால் தற்சமயம் புத்தளம் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் குடியேற்றக் கிராமங்களை "மீள்குடியேற்றக் கிராமங்கள்" என அழைக்கின்றது. இதனை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. மீள்குடியேற்றம் என்பது தமது சொந்த மண்ணிலேயே இடம் பெற வேண்டும் குடியேற்றங்களை "தற்காலிக குடியிருப்பு ஏற்பாடு" என்றே அழைக்க வேண்டும். இதனை அமைச்சும் அறிவிக்க வேண்டும்.

தத்தமது தாயகங்களிலிருந்து விரட்டியடிக் கப்பட்ட மக்கள் என்றுமே வீணே காலத்தைக் கடத்தவில்லை. அவர்கள் தீர்க்கமாகப் போராடியதன் மூலம் தமது தாயகங்களை மீட்டுக் கொண்டு வருகிறார்கள். இது எமக்கு ஒரு பாடமாக அமைய வேண்டும் என்றும் கூறினார்.

## வடமாகாண உலமாக்களுக்கான விசேட ஒன்று கூடல்

29.12.96 அன்று புத்தளம் காஸிமிய்யா அரபிக் கல்லூரியில் வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு,(NMRO) வடமாகாண உலமாக்களுக்கான விசேட ஒன்று கூடலை நடத்தியது. இக் கூட்டத்தில் கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக வடக்கு முஸ்லிம்களின் பறிக்கப்பட்ட உரிமைகளை வென்றெடுக்கும் நடவடிக்கைகளை மேற் கொண்டு வரும் என்.எம்.ஆர். ஓவின் தொடர்ச்சியான செயற்திட்ட நடவடிக்கை களை விளக்கிக் கூறியதுடன் தொடர்ந்து இச் செயற்திட்டங்களை வெற்றிகரமாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முன்னெடுத்துச் செல்வதற்கும், எமது மக்களின் இஸ்லாமிய வாழ்க்கை முறையை மேம்படுத்துவதற்கும் உலமாக்களின் ஆலோசனைகளையும் பங்களிப்பையும் கோரப்பட்டது.

முகாம் மட்டத்தில் இஸ்லாஹியத், (இஸ்லாமிய சீர்திருத்தம்) தஃவா, தர்பியா ஆகியவைகள் பரவலாகச் செய்யப்பட வேண்டும் என்றும், இதற்கான வேலைத் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும் என்பன போன்ற விடயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டது. மற்றொரு கூட்டத்தில் இவற்றுக்கான வேலைத்திட்டங்களை தயாரிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

## வடக்கு முஸ்லிம்களின் பிரச்சினைகளும் எதிர்காலமும்

26.1.97இல் சரிக்கமுல்லை, ஜீலான் மத்திய கல்லூரி, கனிஷ்ட பிரிவு மண்டபத்தில், பாணந்துறைப் பிரதேச செயலகப் பிரிவுக்குள் வாழும் வடக்கு முஸ்லிம்கள் மத்தியில் "வடக்கு முஸ்லிம்களின் பிரச்சினைகளும் எதிர்காலமும்" என்ற தலைப்பில் கருத்தரங்கு இடம் பெற்றது. இக் கருத்தரங்கிற்கு NMRO வின் உப தலைவர் மௌலவி பி.ஏ.எஸ் சுப்யான் தலைமை தாங்கினார். இக்கருத்தரங்கில் NMRO வின் தலைவர் கலாநிதி எஸ்.எச்.ஹஸ்புல்லாஹ் கருத்துரை வழங்கும் போது,

"வடக்கு முஸ்லிம்கள் அகதி முகாம்களிலும், மற்றும் இடங்களிலும் புதுப்புது பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். இவற்றுக்கு நிவாரணம் காண்பது அர்த்தமற்ற செயலாகும். சொந்த மண்ணுக்குத் திரும்பிச் செல்லக் கூடியவாறான அடிப்படை பிரச்சினை தீர்ந்தால் ஏனைய பிரச்சினைகள் தானே அகன்று விடும்.

மீள்குடியேற்றம் என்ற அடிப்படையில் புத்தளம் மாவட்டத்தில் வடக்கு முஸ்லிம்களைக் குடியேற்றுவது பிரச்சினைக்கு பரிகாரமாகாது. இதை எமது அமைப்பு வன்மையாகக் கண்டிக்கிறது.

ஒரு சமுதாயத்தினர் இன்னொரு சமுதாயத்தினரால் பலவந்தமாக வெளியேற்றப்படுவது இனப்படுகொலைக்கு சமனாகும். தமது சொந்த மண்ணிலிருந்து வெளியேற்றப்படும்போது கல்வி, பொருளாதாரம், சமூக கலாசாரப் பாரம்பரியங்கள் அத்தனையும் அழிக்கப்படுகின்றன. இது உலகத்தில் சாதாரண நிகழ்வல்ல. இத்தகைய ஒரு நிகழ்வே வடக்கு முஸ்லிம்களுக்கும் ஏற்பட்டது என்று கூறினார்.

இக்கூட்டத்தில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவரும் ஜீலான் மத்திய கல்லூரி அதிபருமான என்.பி.எம். சுல்தான் அவர்களும் உரை நிகழ்த்தினார்.

## வடக்கு முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

வவுனியா மாவட்டத்திலுள்ள அனைத்து பள்ளிவாசல்களின் தர்மகர்த்தாக்கள், உலமாக்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் விசேட அழைப்பு விடுக்கப்பட்டு 5.2.97 வவுனியா டவுன் ஜும்ஆப் பள்ளிவாசலில் அஸர் தொழுகையின் பின் "வடக்கு முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்" என்ற தலைப்பில் NMRO விஷேட சொற்பொழிவுக்கான ஏற்பாட்டைச் செய்திருந்தது. வவுனியா டவுண் ஜும்ஆப் பள்ளித் தலைவர் அல்ஹாஜ் பி.எஸ். அப்துல்லாஹ் தலைமையில் இச்சொற்பொழிவு இடம் பெற்றது. இச் சொற்பொழிவுக்கான அறிமுகவுரையும் வரவேற்புரையும் ஆரிப் (நகரசபை உறுப்பினர்) நிகழ்த்தினார்.

இக்கூட்டத்தில் உரையாற்றிய NMRO நுரைசோலைப் பொறுப்பாளர் மிஹ்ழார் தனது உரையில், சர்வதேச ரீதியில் முஸ்லிம் அகதிகளின் பிரச்சினையும் இதற்காக அம்மக்கள் எடுத்துவரும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் எடுத்துக் கூறி, எமது மக்கள் தங்களது உரிமைப் போராட்டத்தில் காட்டும் அசிரத்தையை கண்டித்தார். அத்துடன் உரிமைப் போராட்டத்துக்கான அழைப்பையும் விடுத்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அடுத்து பேசிய பி.ஏ.எஸ். சுப்யான் அவர்கள் வடக்கு முஸ்லிம்கள் எதிர் நோக்கும் பல பிரச்சினைகளை வரிசைப்படுத்தி, இவற்றுக்கான தீர்வு எமது ஒன்றுபட்ட போராட்டத்திலேயே தங்கியுள்ளது என்று கூறினார்.

## நூல் வெளியீடு

15.3.97 நுரைச்சோலை முஸ்லிம் வித்தியாலயத்தில் "இலங்கையின் இனப் பிரச்சினையும் பலவந்தமாக வெளியேற்றப் பட்ட வடமாகாண முஸ்லிம்களும்" (முல்லைத்தீவு முஸ்லிம்கள்- தொகுதி 3) எனும் நூலை NMRO வெளியிட்டது.

இவ் வெளியீட்டு வைபவத்துக்கு, ஓய்வு பெற்ற அதிபர் ஏ.சீ.எல்.ஏ.றஹீம் தலைமை வகித்தார். விரிவுரையாளரும் NMRO மத்திய செயற்குழு உறுப்பினருமான எஸ்.எம். நியாஸ் வரவேற்புரை நிகழ்த்தினார். பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மௌலவி ஏ.எல்.எம்.இப்றாஹீம்,.என்.எப்.எம். சைபுத்தீன் அவர்களினதும் புத்தளம் வலய கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம். மஹ்ரூப் மரைக்கார், போரூட் நிறுவன திட்டமிடல் பணிப்பாளர் எம்.எப்.மரைக்கார் மௌலவி. பி.ஏ.எஸ். சுப்யான், ஏ.எஸ். ஹாஜா மக்தூம், (கிராம அதிகாரி மண்/ வேப்பங்குளம்) NMRO பொருளாளர் எம்.எம். அமீன் சட்டத்தரணி எஸ்.ஜபருல்லாஹ் ஆகியோரினது உரைகளும் நிகழ்ந்தன.

நூலுக்கு விமர்சன உரையை நிகழ்த்திய பேராதனைப் பல்கலைக்கழ சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.எஸ்.எம்.அனஸ் அவர்கள் தனதுரையில், "17ம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே முஸ்லிம்களுக்கென்று வரலாறு உள்ளது. மாத்தளை, கண்டி, புத்தளம், அநுராதபுரம் போன்ற நகர முஸ்லிம்களின் வரலாறுகள் நூல் உருவில் அவ்வப் பகுதிளிலேயே வெளிவந்தன. ஆனால் முல்லைத்தீவு முஸ்லிம்களின் வரலாறோ நுரைச்சோலயில் வெளியாகுவதையிட்டு வேதனையடைகின்றேன். கலாநிதி எஸ்.எச். ஹஸ்புல்லாஹ்வின் இமயமலை சாதனை என்று கூட இந்நூல் வெளியீட்டை குறிப்பிடலாம்.

இது ஒரு வரலாற்று நூல் என்பதை விட, வெளியேற்றப்பட்ட மக்களுக்காக வெளியாகும் கண்ணீர் காவியம் என்றே குறிப்பிட வேண்டும். இனப்பிரச்சினைக்கு அரசாங்கம் முன்வைத்துள்ள அதிகாரப் பரவலாக்கல் திட்டத்துடன் இந்நூலும் வெளியாவது ஒரு சமாதானத் தூது என்றே குறிப்பிட வேண்டும்" என்று கூறினார்.

## யாழ் முஸ்லிம்களின் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் எதிர்காலமும் ஆலோசனைக் கூட்டம்.

10.05.97 அன்று கொழும்பு 6 இஸ்லாமிய கல்வி நிலையத்தின் (CIS) கேட்போர் கூடத்தில் மேற்படி கூட்டம் மௌலவி. பி.ஏ.எஸ்.சுப்யானின் தலைமை யில் இடம் பெற்றது. இக்கூட்டத்தில் NMRO வின் யாழ் முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் தொடர்பான வேலைத்திட்டத்தை அமைப்பின் தலைவர் கலாநிதி எஸ்.எச். ஹஸ்புல்லாஹ் முன்வைத்தார். இதன் பின்பு இடம்பெற்ற கருத்துரைகளில் ஒரு சிலரினால் யாழ் முஸ்லிம்கள் அனைவரையும் ஒன்று திரட்டிய ஒரு கூட்டத்திலிருந்து ஒரு சக்தி வாய்ந்த செயலணிக் குழுவைத்தெரிவு செய்து அதன் மூலம் நடவடிக்கைகளை மேற்கொள்ள தாம் தீர்மானித்திருப்பதாகவும், இதற்கான ஒழுங்குகளை தாம் மேற்கொண்டு வருவதாகவும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இதனைக் கருத்திற் கொண்டு NMRO தற்போது முன்வைத்துள்ள செயற்திட்டத்தை உடனடியாக அமுல்படுத்துவதை தற்காலிகமாக இடைநிறுத்துவது என்ற தீர்மானம் எடுக்கப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# AN ALMOST FORGOTTEN PEOPLE

by S.Sivasegaram

It is now more than six years since Muslims were driven out of the north of Sri Lanka. Much has happened since in the country. There have been a change of government, the departure of two presidents, and the rise and fall of hope for peace. The war as the armed extension of the politics of national oppression and resistance persists with no end in sight, and there is no shortage of explanations for continuing with the war. The victims of war and violations of human rights and human life become important only to the extent that they Help to score political point and strengthen propaganda. It appears that the Northern Muslims are among the forgotten people, even as far as many campaigners for peace are concerned.

I read a statement issued by the Northern Muslims Rights Organisation (NMRO) earlier this year explaining the plight of the displaced Muslims in refugee camps and elsewhere in the Island and calling for positive action to help them to return to their homes. It was a dignified statement in which the signatories remembered things that were good in the relationship between the Thamils and Muslims of the North. They pointed out that an injustice had been done to them, wanted to know why, and asked for the wrong to be put right. Their statement was exemplary in many ways, especially in the expression of a willingness to forgive and a positive approach to finding a solution without asking for retribution.

In July this year, I was invited by my friend and well-known poet Jeyapalan to attend a meeting organised in Colombo by the NMRO to discuss their problems with interested Thamils. The spirit of the statement by the NMRO was reflected in the words of every Muslim who rose to speak and there was no hostility towards the Thamils, with whom the recognised that their future, like their past, was closely tied. They remembered many good things including the election of a Muslim as Mayor of Yaalppaanam. I was particularly moved when one speaker said that the only difference that he saw between the Thamils and the Muslims of Yaalppaanam was that the former went to the temple on Fridays while the latter went to the Mosque. They rebutted attempts by certain Muslim leaders of the East and South or for that matter any political party to use them for short-term political gains. Their appeal was to the Thamil people of the North and all that they wanted was a right to return home and the release of the Muslim youth detained by the LTTE. They refused to return to their homes with the backing of the government and wanted to return only when it was possible and safe for the Thamils to return home. I recently received two publications, entitled we want to go home and refugees are People by Dr. S.H.Hasbullah, released by the NMRO, to draw attention to the plight of the Muslims. The NMRO also publishes a magazine in Thamil entitled Ahadhi over the past three years at irregular intervals with the tenth issue dated October 96, and will recommend it to every clear thinking Thamil.

I was glad to read statements from leaders of the LTTE in the past year, Implicitly admitting that the decision to drive out the Muslims was a serious mistake. I hope that the LTTE will soon follow this with more positive gestures which will help restore and reinforce the close links between the Thamils and Muslims of the will only strengthen the just struggle of the Thamil people for their right to self-determination. A just stand on the question of the Northern Muslims is important to the Northern Muslims is important to the struggle of the Thamils for justice, which is not against the Sinhalese, and the fair treatment of the Muslims will inevitably be a measure of the moral right of the Thamil nationality to ask for fair treatment by the Sinhala majority, and no Thamil with a conscience can afford to ignore it.

***Tamil Times 15 Dec 1996.***



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# NGO'S TO GEAR UP AND UNITED AND MUSLIM REFUGEES PROBLEM TO BE SOLVED

*by: M.S.M. Jansin BBA (Hons)*

When we talk about the word 'Refugees' in Sri Lanka most of the people think about Tamil who were made shifted in their own area or the Sinhalese who shifted border villages of proposed Tamil Ealam. But no one thinks about Northern Muslims who were brutally chased away with empty hand at gun point in October 1990.

These real victims of Ealam war have been forgotten by the politician and the general public. Actually these Muslims who lived in Mannar, Jaffna, Mullaitive, Vavuniya and Kilinochchi districts were forced to leave their homelands by the LTTE in 1990. When they were driven away from their place of origin they were forced to leave behind all their belongings. Only 200 rupees per head was allowed at the time of cxpulsion. Since these Muslims don't have closer relationship with the government forces or the LTTE the present fate of them is to be considered much.

After the expulsion they managed to settle in more 200 refugee camps mainly in Puttalam. Kurunegala, Annuradapura, Negombo and Colombo territories. They were given tends, huts and dry ration for a dole of Rs.1260 per month per family of five members. Clothes and foods were given by their breathers who line in other part of the Island Non government organization aided these Muslims as much as possible. Later on they find themselves tined and hopeless in helping these people. Gradually the assistants provided by then were cut down. But we have to remember that these refugees are living in 12 x 10 feet huts for the last seven years. These refugees camps condition are very inhuman and they were not given with normal housing facility, employment or any loan to commence any self employment enterpreneurship.

Even though they are living in the government controlled area for the last 7 years No ideal plan or project were prepared to solve the problems of Northern Muslim refugee. Out of the 700,000 refugees these 75,000 refugees are living in the government controlled area, and consist of only 15000 families.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



After the P.A. government came to the power before and just after the presidential and parliment election we were remembered. Now once again we were forgotten. Even tough they brought only 200 rupees per head and no wealth and the government didn't give any financial assistant other than dry ration for only a date of Rs 1260 per month per family, these refugees were asked to buy lands on their own so that government, will provide them 35,000 rupees to put up a luxurious hut thin 35000 rupees even not enough to put a 12 x 12 feet normal house where these refugees will go for the balance?

In 1995 December 4th the Sri Lankan forces captured Jaffna. But no steps taken by the government to resettle the Muslims in their home land. And on the other hand resettlement of Muslims is depended upon the green signal of the LTTE which did not and will not do until today. And these refugees become hopeless and they are willing to settle in the places where they are lining now. Now the question in how they can buy a land and put up a house with in that 3500 rupees since the land price in 15.000 to 20000 rupees per ten perch. So there people realised that believing on the government projects is not worthy. So they turned their side towards non government and foreign diplomat and foreign organization to get thin affective work done.

So, The settlement scheme can be drawn only for the 15000 Families They need minimum of Rs 100.00 to put up a 20 x 15 feet size house Government will provide Rs. 35000. The balance shall be provided by organization. Who are working to solve the refugees problem. The assistants should be provided directly by the organization or under the supervision of them. There are many organization among refugees for their well weing. MORRSED, RDF, NMRO are such organization which are doing a marvellous tasks. Assistant are always readily available from there organization. But the assistant should not come through government since the assurance of proper utilization can't be get from the government.

This October 97 will be the 7th year of expulsion of the Northern Muslims. And they are 7 year refugee children in Sri Lanka. There refugee should be treated separately from other refugees because of the above reasons and any one can't accuse if any one gives priority to this Muslim refugees.

So, all organizations who to help this Muslim refugees gear up, Corporate your self, Do your affective task in order to wipe out the tears of the refugees.

■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 'அகதி' கட்டுரை, கவிதைப் போட்டிகள்

1. போட்டிகள் இரு பிரிவுகளாக நடாத்தப்படும்.

*பிரிவு (அ)*

பிரிவு (அ) ஜீ.சீ.ஈ.உ/த இரண்டாம் ஆண்டு உட்பட கல்வி பெறும் மாணவர்களுக்கானது. ஜீ.சீ.ஈ.உ/த பரீட்சை எழுதியோர் பங்கு பற்ற முடியாது. பங்குபற்றும் மாணவர் பாடசாலை அதிபர் மூலம் கல்வி பெறும் ஆண்டையும், சொந்த ஆக்கம் என்பதையும் உறுதிப்படுத்தி அனுப்ப வேண்டும்.

*பிரிவு (ஆ)*

மாணவரல்லாத எவரும் பங்கு பற்றலாம். ஆக்கம் சொந்தமானது என்பதை ஒரு கடிதத்தில் உறுதிப்படுத்துவதோடு ஒரு சமாதான நீதவான், சட்டத்தரணி, அதிபர் ஆகியோரில் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

## பொது நிபந்தனைகள்

1. ஆக்கம் சொந்தமானதாகவும், பிரதி செய்யப்படாததாகவும் சொந்தக் கையெழுத்திலும் இருக்க வேண்டும்.
2. பூள்ஸ்கெப் தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுதப்படல் வேண்டும்.
3. தமிழ் மொழியில் மாத்திரமே எழுதப்பட வேண்டும்.
4. 'அகதி' இதழ் நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது
5. அகதி 11 உள்ள விண்ணப்பத்தையே விண்ணப்பதாரர் பயன்படுத்த வேண்டும்.
6. கட்டுரைக்கான தலைப்பு:- **"இலங்கையின் இனப்பிரச்சினையும், வடக்கு முஸ்லிம்களின் எதிர்காலமும்"** (தெளிவான எழுத்தில் 10 பக்கங்களாவது எழுதப்பட வேண்டும்.)

## கவிதை- மேலதிக நிபந்தனைகள்

1. தலைப்பு: **"விடியலை நோக்கி"** அல்லது **பிறந்த மண்ணும்..?**
2. தெளிவான எழுத்தில் 6 பக்கங்களுக்குள் அமைய வேண்டும்.
3. புதுக் கவிதை அமைப்பில் அல்லது விருத்தப்பாவில் எழுதப்பட வேண்டும்.
4. கவிதை எழுச்சிகரமானதாகவும் இருக்க வேண்டும். சபையில் வாசிப்பதற்கும் கவிஞர் தயாராக இருக்க வேண்டும். இரு பகுதியினரிலும் **முதலாம் இடத்தைப் பெறுவோருக்கு ரூபா 1000 ரொக்கமாக வழங்கப்படும்.**

ஆக்கங்கள் பற்றிய ஏனைய விபரங்கள் விண்ணப்ப முடிவு திகதியான 30.06.9? ன் பின்னர், விண்ணப்பித்தோருக்கு தபாலில் அனுப்பி வைக்கப்படும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விண்ணப்பப் படிவம்

முழுப் பெயர்–: ........................................

நிரந்தர முகவரி : ........................................

........................................

தற்போதைய முகவரி : ........................................

........................................

பிறந்த திகதி : ........................................

தொழில்: ........................................

தொழில் முகவரி : ........................................

**மாணவராயின்**

கல்வி ஆண்டு : ........................................

கல்வி கற்கும் பாடசாலை ........................................

பிரிவு :........................................

பங்குபற்ற விரும்பும் போட்டி : ........................................

தெரிவு செய்துள்ள தலைப்பு : ........................................

........................................

இவ் ஆக்கம் என்னால் எழுதப்பட்டது எனவும் இதற்கு முன்னர் பிரசுரிக்கப்படாதது எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

........................................

***விண்ணப்பதாரி***

***உறுதிப்படுத்துவோர்***

பெயர் : ........................................

விலாசம் : ........................................

*இத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஆக்கமானது இவரது சொந்த ஆக்கம் என்பதை இத்தாள் உறுதிப்படுத்துகின்றேன்.*

***அதிபர் – சமாதான நீதிவான் – சட்டத்தரணி***

............................ ............................ ............................



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 'வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு'
# NORTHERN MUSLIMS' RIGHTS ORGNIZATION" (N.M.R.O)

## பிரதான குறிக்கோள்

1. மீண்டும் பூர்வீகவிடத்தில் வாழும் உரிமை.
2. பலவந்தமாக வெளியேற்றப்பட்டதால் ஏற்பட்ட அசையும், அசையாத ஆவண இழப்பீடுகளை மீளப்பெறும் உரிமை.
3. மீளக் குடியேறும் வரை இலங்கையின் ஏனைய பகுதிகளில் வாழும் பொழுது சகல வசதிகளையும் பெற்றுக் கொள்ளும் உரிமை.
4. வட மாகாணத்தில் மீளக் குடியேறும் போது அச்சமின்றி தனித்துவத் தோடும் பூரண பாதுகாப்புடனும் வாழும் அரசியல் உரிமை.

***மேற்படி குறிக்கோள்களை அடைவதற்காக பின்வரும் செயல் திட்டங்களை இவ்வமைப்பானது நடைமுறைப்படுத்தும்.***


1. வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் புள்ளி விபரங்களைத் திரட்டுவது.
2. அவர்கள் மத்தியில் எதிர் காலத்தைப் பற்றிச் சிந்திக்கும் மனோநிலையை ஏற்படுத்துதல்.
3. இலங்கையில் வாழும் ஏனைய மக்கள் மத்தியிலும் சர்வதேச சமூகத்தின் மத்தியிலும் வடமாகாண முஸ்லிம்களின் வரலாற்றுப் பாரம்பரியம் பற்றியும், அகதிகள் தொடர்பாகவும் அறிவை வழங்குதல்.
4. இந்நோக்கத்தை அடையும் பொருட்டு கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள், பத்திரிகையாளர் மாநாடுகள் போன்றவற்றை நடத்துதல். இவ்வகையான முயற்சிகளின் பிரதிபலன்களை பிரசுரங்களாக வெளியிடுதல்.
5. அரசியல் தீர்வொன்றிற்கு வடமாகாண முஸ்லிம்களின் அபிப்பிராயங்களை ஒன்று திரட்டி அதற்காகத் தயார்படுத்தல்.
6. இந்தக் குறிக்கோள்களை அடைவதற்கு தேசிய, சர்வதேச ரீதியில் பொது அபிப்பிராயத்தை ஏற்படுத்துதல் என்பனவாகும்.

இவ்வமைப்பில் அங்கம் வகித்து, தாயக மண்ணை மீட்பதற்கும், எமது உரிமைகளை வென்றெடுப்பதற்கும் தங்களது பங்களிப்பைச் செய்ய முன்வர விரும்புவோர் இதன் அங்கத்துவத்திற்கு விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

*செயலாளர்,*
***வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு***
***15ஏ, ரோகினி வீதி, வெள்ளவத்தை,***
***கொழும்பு – 06.***

www.tamilarangam.net



யாழ் ஒஸ்மானியாக் கல்லூரியின் கம்பீரமான தோற்றத்தின் ஒரு பகுதி

அகதி இதழ் 15A, ரோஹினி வீதி, கொழும்பு 6 வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பினரால் ஏ.ஜே பிரின்ட்ஸ் இல. 1B பீ.ரி.டி சில்வா மாவத்தை, தெஹிவளையில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்